Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-20 | 05-12-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -291




### தமிழரின் உரிமைகளை மட்டுப்படுத்துவதற்காக

# இந்தியாவின் நலன்களைச் சிதைக்கும் அளவிற்கு

# வல்லரசுகளுடன் உறவாட சிறிலங்கா தயார்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு



(கொழும்பு)

**தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மட்டுப்படுத்துவதற்காக எந்தவொரு வல்லரசுடனும் கைகோர்த்துக் கொள்ளவும் இந்தியாவின் கேந்திர நலன்களை சிதைத்துவிடக்கூடிய அளவிற்குவல்லரசு நாடுகளின் தலைமீடுகளை அனுமதிக்கவும் சிறிலங்கா அரசாங்கம் தயாராயிருக்கிறது. இவ்வாறு தமிழ் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சுக்கான வரவு-செலவு திட்ட ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் பேசுகையில் மேற் குறிப்பிட்டவாறு தெரிவித்த அவர்,

இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நலன்களுக்கு எதிராக தமிழ் மக்கள் செயற்பட மாட்டார்கள். இந்தியா

(14ஆம் பக்கம் பார்க்க)

### சனாதிபதி வேட்பாளராக ரணில் அறிவிக்கப்படுவார்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் உத்தியோகபூர்வமாக இன்று அறிவிக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான பேராசிரியர் ஜி. எல்பீரிஸ் தெரிவித்துள்ளார். இன்று இடம்பெறவுள்ள கட்சியின் 50 ஆவது மாநாட்டில் இந்த தீர்மானம் அறிவிக்கப்படவுள்ளதுடன் சனாதிபதி

(14ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம்

மட்டு அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் தவறுதலான வெடி விபத்தின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

☐ வீரவேங்கை-நிசாந்தன் (வில்வநாயகம்-ஜெயசீலன் 06ஆம்

(14ஆம் பக்கம் பார்க்க)

### வாகனம் குடைசாய்ந்தது

(பூநகரி)

தற்போது பெய்த மழையின் காரணமாகப் பூநகரி பரந்தன் வீதியில் செல்விபுரக்கிராமத்திற் கிடையே காணப்படும் பரந்தன் வீதிப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஜே.வி.பி.யின் வன்செயல்கள் குறித்து புலிகள்–கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திக்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலையில் சிங்கள இனவாதக் கட்சியான ஜே.வி.பி. கட்சியும், சிறிலங்காப் படையினரும், சிங்கள காடையர் கும்பல்களும் இணைந்து தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

திருமலை மாவட்டத்தில் இடம்பெறவுள்ள இச்சந்திப்புக்கான அழைப்பை திருமலை கண்காணிப்புக் குழுவின் மாவட்ட செயலகம் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறையினர் விடுத்திருந்தனர். இதனை ஏற்றுக் கொண்டு கண்காணிப்புக் குழுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### வல்வெட்டித்துறை படுகொலைச் சம்பவம்

## சாட்சிகளை மிரட்டும் நடவடிக்கையில் பொலிசார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்ச்சி வல்வெட்டித்துறையில் உள்ளசிதம்பராக் கல்லூரி மைதானத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளின் இரு முக்கிய சாட்சியங்களையும் அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் சிறிலங்காப் பொலிசார் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நேரில் கண்ட இருவர் துப்பாக்கிச் சூட்டினை நடத்தியவர்கள் தொடர்பான அடையாளங்களையும்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## தந்திரோபாய, திட்டமிடல் உயர் மட்டக் குழு வடக்கு-கிழக்கில் தகவல் திரட்டுகிறது!

(கொழும்பு)

மீண்டும் போர் ஒன்று வெடித்தால் அதனை எதிர்கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பில் அமைக்கப்பட்ட அதி உயர் விசேட குழு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நேரடியாகத் தகவல்களைத் திரட்டி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்குழு பற்றித் தெரியவருவதாவது, மீண்டும் போர் வெடித்தால் அதனை எதிர்கொள்வதற்கும், எதிர்கால இராணுவ நடவடிக்கைகள் குறித்து திட்டமிடுவதற்கும் அதிஉயர் விசேட குழுவொன்றை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது. அண்மைய எதிர்காலத்தில் மோதல் நிலைமை எதுவும் உருவாகும் சாத்தியமுள்ளதாக அரசு கருதுவதாலேயே, சனாதிபதியின் பணிப்பின் பேரில் இந்த உயர்மட்ட விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தந்திரோபாய திட்டமிடல் குழுவான இந்த உயர் மட்டக் குழுவை பிரதம பாதுகாப்பு அதிகாரியான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நியமித்துள்ளதாகவும், வடக்கு -

(14ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு –புலிகள் அம்பாறையில் சந்தித்துப் பேச்சு

போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் நேற்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பனை சந்தித்து உரையாடினர்.

இந்தச் சந்திப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போது மாவட்டத்தில் போர் நிறுத்த உடன்பாடுகளின் நடைமுறை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக அம்பாறை மாவட்ட தமிழீழ விடு

(14ஆம் பக்கம் பார்க்க)

### மின்பிறப்பாக்கி எடுத்துவரத் தடை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி, தென்மராட்சி பகுதி மக்கள், திருமண வைபவங்கள், கோவில் மற்றும் பொது நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு மின் விளக்கு ஏற்றுவதற்கு மின்சார ஜெனரேட்டர்களைக் கொண்டு செல்வதானால் அதற்கு பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினரிடம் அனுமதி பெற வேண்டும் என்று புதிய கட்டுப்பாடு ஒன்றை இராணுவம் விதித்திருக்கின்றது.

பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு போர்நிறுத்த ஒப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய- சிறில. பாதுகாப்பு உடன்பாட்டிற்கு எதிராக

# புலம்பெயர்ந்த தமிழர்கள் பொங்கி எழ வேண்டும்

### அமெரிக்காவிலுள்ள ஈழத்தமிழர் கோரிக்கை

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு மற்றும் மாவீரர் தினம் ஆகிய தமிழீழத் தேசிய நிகழ்வுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் காண்பித்த எழுச்சியைக் காட்டி இலங்கையுடன் இந்தியா செய்துகொள்ள உத்தேசித்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவிலுள்ள ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் அத்தனை ஈழத் தமிழர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது - “தமிழ் மக்கள் எல்லா நாடுகளிலும் பாரிய அளவிலான ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்தி இந்தியா,இலங்கையுடன் செய்து கொள்ள உத்தேசித்துள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தை நிறுத்தக் கோரி அந்தந்த நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில் மகஜர்களைக் கையளித்து தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தில் உள்ள காத்திரத்தை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு சமாதானம் என்ற பெயரில் இலங்கை அரசு போடும் இரட்டை வேடத்தையும் தெரிந்து கொள்ளும். வெளிநாடுகளில் ஏற்பாடு செய்யும் இந்த பேரணிகளுக்கு அங்குள்ள இந்திய நிறுவனங் கள், கடைகள் அரசுசாரா அமைப்புக்கள், கழகங்கள் இந்தியாவின் பல்வேறு சமூகங்கள்,

(14ஆம் பக்கம் பார்க்க)

# கடும்மழை வெள்ளத்தினால் கிளி.யில் கிராமங்கள் துண்டிக்கப்பட்டன

## நகர வர்த்தக நிலையங்களுக்குள்ளும் வெள்ளம்

(அலுவலகசெய்தியாளர்)

தற்போது பெய்து வரும் மழை காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குடியிருப்புகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் வெள்ளத்தின் காரணமாக 156 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலையிலும், தேவாலயத்திலும் தஞ்சமடைந்துள்ளதாகவும் அவர்களுக்கும் சமைத்த உணவுகள் வழங்கும் நடவடிக்கையினை



கிளி. நகர உணவு நிலையத்திற்குள் வெள்ளம்

தெரிய வந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்; மழை வெள்ளங் காரணமாக பச்சிலைப்பள்ளி பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கச்சாவெளி கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளமையின் காரணமாக 300 குடும்பங்கள் வெள்ளத்தில் அகப்பட்டுள்ளதாகவும், அப்பகுதி மக்களை அப்பிரதேசங்களில் இருந்து மீட்கும் பணிகளை பளைப் பிரதேச செயலர் மேற்கொண்டு வருவதாகவும், அவர்களுக்கு நேற்று உடனடியாக பாண் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவசர மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு எண்ணெய் பரல்களை ஒன்றாக இணைத்து வெள்ளத்தில் அகப்பட்டுள்ள மக்களை மீட்கும் பணிகளும் மேற்கொள்ளப் பெற்று வருவதாகவும் தெரிவித்தார். மற்றும் பூநகரி நாச்சிக்குடாப் பகுதியில் பூநகரிப் பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் அக்கராயன் பாலன் குள நீர்மட்டம் உயர்ந்துள்ளமையின் காரணமாக குள அணைக்கட்டினை பாதுகாக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு கரைச்சி பிரதேச செயலர் செல்வி. க.சுலோஜினியின் வேண்டுகைக்கமைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் 300 உரப்பைகள் வழங்கப்பட்டு மண்கள் நிரப்பி அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மற்றும் கிளிநொச்சி நகரப் பகுதியில் வடிகால் சீரற்ற நிலையில் உள்ளமையின் காரணமாக வியாபார நிலையங்கட்குள் மழை வெள்ளம் உட்புகுந்தமையினால் வியாபார நிலையங்கள் சில மூடப்பட்டுள்ளதுடன் மேற்படி வெள்ளம் வெளியேற முடியாத நிலையில் தேக்கம் கொண்டுள்ளமையினை கிளி.அரச அதிபர் நேரில் பார்வையிட்டு வடிகால்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை உடன் அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதுடன், அவசர நடவடிக்கையாக இயந்திரத்தினால் தற்காலிகமாக வடிகால்கள் வெட்டி வெள்ள நீரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

(சோ)

## கடும் காற்றினால் சேதம்

நேற்றுக்காலை வீசிய கடும் காற்றுக்காரணமாகப் பரந்தன் சந்திப்பகுதியில் பல சேதங்கள் ஏற்பட்டுள்ளது. பரந்தன் பஸ் தரிப்பு நிலைய்த்தின் தகரம் சேதமடைந்ததுடன், அங்கு தூக்கப்பட்ட மணிக்கூடு தூக்கி எறியப்பட்டது. அத்துடன் ஒரு பொறியியல் நிறுவனத்தின் தகரத்தால் அமைக்கப்பட்ட கொட்டகையின் பல தகரங்கள் தூக்கி வீசப்பட்டன. இதன் போது அங்கு கடமையில் இருந்த ஊழியர்கள் மிகுந்தத அச்சம் அடைந்து பாதுகாப்புத் தேடி ஓடியதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

(14)

### விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற்றொழிலாளர்களின் தொழிற்றுறை மேம்பாடு கருதி நவீன கடற்றொழில் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளிக்கும் விசேட செயலமர்வு ஒன்று நாளை முற்பகல் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

மூவிமென்டோ எனும் சர்வதேச தொண்டர் அமைப்பினது உதவியுடன் இடம் பெறும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளும் கடற்றொழிலாளர்களுக்கு செயலமர்வின் முடிவில் சுமார் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்படும்.

(33)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூரைவிரிப்பு விநியோகத்தில் பாரபட்சம்

(அலுவலகசெய்தியாளர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரந்தன் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான கூரை விரிப்பு விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்பட்டிருப்பதாகவும், வெள்ளப்பாதிப்பு சரியான முறையில் மதிப்பிடப்படவில்லை எனவும் அக்கிராம மக்கள் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஊரியான், பரந்தன், குமரபுரம், உமையாள் புரம் ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் வசித்து வரும் குடும்பங்களில் வெள்ளப் பாதிப்புக்குட்பட்ட குடும்பங்களில் ஒரு தொகுதியினருக்கு உணவல்லாத பாவனைப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமங்களில் அண்மைக்கால பெருமழை காரணமாக மக்களின் குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்து பல தடவைகள் இந்த மக்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இந்நிலையில் பரந்தன் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் தமக்கான கூரைவிரிப்பு வழங்குவதில் பாரபட்சம் இடம் பெற்றிருப்பதாக பரந்தன் கிராம சேவகர் அலுவலகத்தில் கூடி நின்று கூச்சலிட்டனர்.

இவ்வாறு கூச்சலிட்ட இக் கிராம மக்கள் தெரிவிக்கையில்; அண்மைய மழை காரணமாக எமது வீடுகள் பல சுவர்கள் இடிந்த நிலையில் உள்ளன. சில வீடுகள் வெள்ளம் சூழ்ந்த நிலையில் உள்ளது. இதனால் நாம் அன்றாடம் பெரும் துயரங்களின் மத்தியில் வாழ்ந்து வருகிறோம். எமது அன்றாட வாழ்வு இப்படி இருக்க வெள்ளப்பாதிப்பு சரியான முறையில் மதிப்பிடப்படாது இப்பொருட்கள் வழங்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்கள் இப்பொருட்களைப் பெறவில்லை. பாதிக்கப்படாதவர்களும் இவற்றைப் பெற்றுள்ளனர். இது மட்டுமல்ல முதற்தடவை இப்பொருட்களைப் பெற்றவர்கள் இரண்டாவது தடவையும் இதனைப் பெறுகிறார்கள். ஒரு தடவை கூட இப் பொருட்களைப் பெறாத பாதிக்கப்பட்டவர்களும் இங்கே இருக்கிறார்கள். எனவே பாதிக்கப் பட்டவர்கள் சரியான முறையில் இனங்காணப்பட்டு அவர்களுக்கே இப்பொருட்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அந்த மக்கள் கூச்சலிட்டுக் கூறினர்.

வெள்ளப்பாதிப்புக்குட்பட்டதாகக் கூறும் மக்களால் முன்வைக்கப் பட்ட கருத்துக்களின் உண்மைத் தன்மை பற்றி அறிந்து கொள்வதற்கு முற்பட்ட போதும் இப் பொருட்கள் வழங்கப்பட்ட சமயம் கிராமசேவகர் அலுவலகத்தில் இருக்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

(லோ,தீ)

# வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதி ஏ-9 வீதிக்கருகாமையில் கழிவு வாய்க்கால் அமைப்பது தொடர்பாக கிளிநொச்சிப் பிரதேச வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் நாளை மாலை 2.00 மணிக்கு கிளிநொச்சி அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள வர்த்தகர்களையும் அன்றைய தினம் மேற்படி கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி.கரைச்சி பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தம். வேண்டுகை விடுத்துள்ளார்.

(சோ)


## கண்ணீர் அஞ்சலி

தமிழ் மாதாவின் மடியில்
13
04
1941



தமிழ் மண்ணின் மடியில்
03
02
2004

அமரர்

**முருகன் இரத்தினசிங்கம்**

**ஆளுகை அலுவலர்**

**மனிதவள மேம்பாட்டுப் பகுதி,**

**நிதித்துறை.**

அன்பான ஐயாவே
எமை ஆதரித்து நின்றவரே
தமிழ் மண்ணை விட்டு மறைந்தாலும்
எங்கள் மனங்களில்
என்றென்றும் நிலைத்திருப்பீர்

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் இவரது மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொறுப்பாளர்,பணியாளர்கள்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி
நிதித்துறை.

(சி.11001)



### யாழ்.நகரில் ஆண்டு பூர்த்தியை கொண்டாடுகின்றார்கள்

## சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகத்தினர்

*யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி இல.516 இல் அமையப் பெற்ற சொலெக்ஸ் பல் மூக்கு கண்ணாடி அகத்தினர்கள் தமது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வன்னிமக்களின் நலன் கருதியும் மேலும் பல சலுகைகளையும் அறிமுகப்படுத்துகின்றார்கள்.

*பாடசாலை மாணவர்களும், வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களும் தத்தமது கிராமசேவையாளரின் சிபார்சுக் கடிதத்துடன் சமுகம் தந்தால் 25% கழிவுடன் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம். [05. டிசம்பர் 2004 தொடக்கம் 05 சனவரி 2005 வரை]

*பாடசாலை மாணவர்களுக்கு சிறியரக பாதுகாப்பான பிறேம்கள் பிளாஸ்ரிக் கண்ணாடிகளில் உடன் பொருத்திக் கொடுக்கப்படும்.

*அன்றைய தினமே கண்களைப் பரிசோதித்து 1/2 மணி நேரத்தில் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

*வர்ணங்கள் ஊட்டப்பட்ட பிறேம் அற்ற (RIMLESS) கண்ணாடி வகைகளை நீங்கள் தெரிவு செய்யும் நிறங்களில் அன்றைய தினமே பெற்றுக் கொள்ளலாம்.

*பல் சம்பந்தமான சகல ஆலோசனைகள் பெற்று சங்குப் பற்களை அழகாகக் கட்டிக் கொள்ளவும் மிதப்பு பற்களுக்கு கிளிப் பொருத்திச் சீர் செய்து கொள்ளலாம்.

யாழ்.நகரில்:
சொலெக்ஸ் பல் மூக்கு கண்ணாடியகம்,
516 ஆஸ்பத்திரி வீதி
(O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி.10954)

# தீவிரவாதிகளை சமாளிக்க ஈராக் வலுப்பெறும்போது

## அமெரிக்கப் படை புகழுடன் நாடு திரும்பும் - ஜோர்ஜ் புஷ்

(வோஷிங்டன்)

**ஈராக் தேர்தலை ஒத்திவைக்க கூடாது என்று அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார். ஈராக்கில் அடுத்த மாதம் 3ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. தேர்தலை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கும்படி சன்னி முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். மீறி தேர்தல் நடத்தப்பட்டால், அதை புறக்கணிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்**

ஆனால் திட்டமிட்டபடி தேர்தலை நடத்த வேண்டும் என்று ஷியா முஸ்லிம் அரசியல் தலைவர்கள் வலியுறுத்துகின்றனர். தேர்தல் நெருங்கும் நிலையில் ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளது. தேர்தலை சீர்குலைக்க அமெரிக்கப்படைகள் மீதும் ஈராக் பொலிசார் மீதும் அவர்கள் மேலும் பயங்கரத் தாக்குதல்கள் நடத்தக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதனால் தேர்தல் பாதுகாப்புக்காக கூடுதல் இராணுவத்தை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளது. தேர்தலை ஒத்திவைக்க அமெரிக்க அதிபர் புஷ் விரும்பவில்லை. ஜனவரி 30 இல் திட்டமிட்டபடி தேர்தலை நடககவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கிறார்.

வோஷிங்டனில் நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டியில் 'ஈராக் அரசியல் தலைவர்கள் சிலர் தேர்தலை பிற்போடுமாறு கோரிக்கை வைத்துள்ள போதிலும், தேர்தலை ஜனவரி 30 இல் திட்டமிட்டபடி நடத்தவேண்டும. அதை ஒத்திவைக்கக் கூடாது. ஈராக் மக் கள் தேர்தலை சந்திக்க வேண்டிய நேரம் இது. அந்நாட்டு மக்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். அதனால் தான், ஜனவரி 30 இல் தேர்தல் நடத்துவதில் உறுதியாக இருக்கிறேன். தீவிரவாதிகளின் தாக்குதல்களை ஈராக் சமாளிக்கும் திறனைப் பெறும் போது எங்கள் படை அங்கு ஈட்டிய புகழுடன் நாடு திரும்பும் என்றார்.



பலுஜாவில் தாக்குதலில் எரியும் வாகனத்தைக் கடந்து செல்லும் அமெரிக்கக் கடற்படை வீரர் ஒருவர்.



வோசஷிங்டன், ஈராக்கில் அடுத்த மாதம் நடக்கவுள்ள தேர்தல் தொடர்பாக ஆராயவுள்ள நிலையில் பாக்தாத்தில் தனது பயிற்சியினை முடிக்கும் அமெரிக்க-பிரிட்டன் துருப்புக்கள்.

# உலக அமைதியை கட்டிக்காக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் சீர்திருத்தம்

உலக அமைதியை கட்டிக் காப்பதில் ஐ.நா.வின் பிரதான கருவியாகச் செயற்படக்கூடியது ஐ.நா. பாதுகாப்புக்குழுவே. இக்குழு பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டது இவ்களில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் பிரான்ஸ். சீனா ஆகியவற்றின் பிரதிநிதிகள் நிரந்தர உறுப்பினர்கள். மற்றும் பத்து உறுப்பினர்கள் தற்காலிகமானவர்கள். ஐ.நா.பேரவை மூலம் தேர்தெடுக்கப்படுபவர்கள் இவர்கள் இரண்டாண்டுகள் பதவி வகிக்கக்கூடியவர்கள்.

நிரந்தர உறுப்பினர்களைப் பொறுத்த அளவில் அவர்களுக்குச் சிறப்பு உரிமை ஒன்று உண்டு. ஐ.நா.பாதுகாப்புக்குழு முன் வருகின்ற எப்பிரச்சினை குறித்த தீர்மானமாக இருந்தாலும் அதை ரத்து செய்வதற்கான வீட்டோ அதிகாரமே அச்சிறப்புரிமை. உதாரணமாக ஒரு பிரச்சினையில் குழுவின் பதினைந்து உறுப்பினர்களில் பதினான்கு பேர் ஒரு தீர்மானத்தை ஆதரித்தபோதிலும் நிரந்தர உறுப்பு நாடு ஒன்று அதை எதிர்க்கும் பட்சத்தில் அத்தீர்மானம் செல்லாததாகிவிடும். அப்படியென்றால் நிரந்தர உறுப்பு நாடுகள் ஐந்தின் ஒருமித்த ஆதரவு இருந்தாலொழிய பாதுகாப்புக் குழுவில் எந்தத் தீர்மானமும் நிறைவேற்ற முடியாது இதற்கு என்ன பொருள்? ஐ.நா.வின் பலமான பாதுகாப்புக் குழுவின் முடிவை நிர்ணயிக்கும் பலம்- நிரந்தர உறுப்பு நாடுகளிடமே. இதையே வேறுவிதமாகக் கூறுவதென்றால் ஐ.நா.வை இந்த ஐந்து நாடுகளே வழிநடத்திச் செல்கின்றன.

அப்படியென்றால் உலகின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஐந்தே நாடுகளிடமா? 1946-இல் ஐ.நா நிறுவப்பட்ட பொழுது அப்போதைய சூழ்நிலையைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஐ.நா பாதுகாப்புக்குழு வடிவமைக்கப்பட்டது. கடந்த 58 ஆண்டுகளில் எவ்வளவோ பெரிய மாற்றங்கள் உலகம் முழுவதிலும்! அப்பொழுது பல பகுதிகளைக் குடியேற்ற நாடுகளாக கொண்டிருந்த பிரிட்டனும் பிரான்சும் இப்பொழுது சிறிய. நாடுகளே. பெரிய வல்லரசாக இருந்து வந்த சோவியத் யூனியன் சிதறுண்டு விட்டது. இந்தியா பிரேசில்,ஜப்பான் போன்ற புதிய பொருளாதாரச் சக்திகள் தோன்றியுள்ளன. இந்நிலையில் 60 ஆண்டுகளுக்கு முந்தைய ஏற்பாடு இப்பொழுது எப்படிப் பொருந்தும்? தற்போதைய யதார்த்த உலக நிலவரங்களைப் பிரதிபலிக்கும் வகையில் ஐ.நா. வின் அமைப்புகள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு சர்வே தேச அரங்கில் பலம் கூடியது.

அதிலும் குறிப்பாக ஐ.நா பாதுகாப்புக் குழுவின் கட்டமைப்பை மாற்றி அமைக்கும் பிரச்சினைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. அதையொட்டி இப் பிரச்சினை சம்பந்தமாக அறிக்கை தயாரிப்பதற்காக ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் நியமித்த சிறப்புக் குழு இருவேறு மாற்றுத் திட்டங்களைப் பரிந்துரை செய்துள்ளது. ஒன்று பாதுகாப்புக் குழுவில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை இருபத்துநாலாக உயர்த்தலாம் என்பது அமெரிக்கக் கண்டம், ஆபிரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய நான்குக்கும் தலா 6 இடங்கள். ஆயினும் ரத்து அதிகாரம் மட்டும் தற்போதைய ஐந்து நாடுகளுக்கே

இன்னொரு மாற்றுத் திட்டம் நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஐந்திலிருந்து பதினொன்றாக அதிகரிப்பது. மற்ற 13 உறுப்பினர்களை ஐ.நா பேரவை மூலம் தேர்ந்தெடுப்பது!புதிதாக உருவாக்கப்படக்கூடிய ஆறு நிரந்தர இடங்களில் நான்கை இந்தியா, ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் ஆகியவற்றுக்கு ஒதுக்கலாம். இதிலும் வீட்டோ அதிகாரம் இல்லாத நிரந்தர உறுப்பு நாடுகள் என்ற நிலையையும் இந்தியா போன்ற நாடுகள் விரும்பவில்லை. இதற்குப் பதிலாக வீட்டோ அதிகாரத்தையே ஒழித்துக்கட்டிவிட்டு 24 உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் முடிவுப்படி பாதுகாப்புக் குழு இயங்குமாறு செய்யலாம். என்ற கருத்து இந்தியா போன்ற நாடுகளிடம் உள்ளது.

# சர்வதேச பயங்கரவாதி ஒசாமாவை தேடும் பணியில் காஷ்மீர் எல்லையில் அமெரிக்க படையினர்

(ஜில்ஜிட்)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள காஷ்மீர் பகுதியில் சர்வதேச தீவிரவாதி ஒசாமவை தேடும் பணியில் அமெரிக்கப்படைகள் ஈடுபட்டுள்ளன.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை ஒழித்த பின் அங்கு தங்கியிருந்த ஒசாமா மற்றும் தலிபான் தலைவர் ஓமர் உள்ளிட்டவர்கள் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஓடி ஒளிந்தனர். இவர்களைத் தேடும் பணியில் அமெரிக்கப்படைகள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், காஷ்மீர் எல்லைப்பகுதியில் உள்ள ஜில்ஜிட் மலைப் பகுதியில் ஒசாமாவும் அவரது கூட்டாளிகளும் ஒளிந்திருப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கிறது. இதையடுத்து, ஜில்ஜிட் மற்றும் பால்டிஸ்தான் பகுதிகள் அடங்கிய பாலவாரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப்படைகள் ஒசாமாவையும் அவரது கூட்டாளி அய்மான் அல் ஜவா ரியையும் தேடி வருகின்றன.

அமெரிக்க வெளியுறவுத்துறை இணையமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவும் பாகிஸ்தானுக்கான அமெரிக்கத்தூதுவர் நான்சி பாவெல்லும், ஜில்ஜிட் பகுதியில் நடக்கும் அமெரிக்கப்படைகளின் தேடுதல் பணிகளை கடந்த மாதம் பார்வையிடப்பட்டனர்.

# உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து உக்ரைனில் மீண்டும் சனாதிபதி தேர்தல்

உக்ரைனில் மீண்டும் சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த ஐந்து நாட்களாக விசாரணைகளை நடத்திய அந்நாட்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நவம்பர் மாதம் இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு மோசடி இடம் பெற்றுள்ளதென நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

உக்ரைனில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் ரஷ்ய ஆதரவு பெற்ற விக்டர் யானுகோவிச் வெற்றியை எதிர்த்து அமெரிக்க ஆதரவு பெற்ற விக்டர் யுஷென்கோ இது சட்டவிரோதம் எனவும், அவரது தேர்தல் செல்லாது என எதிர்ப்புத் தெரிவித்தமை தெரிந்ததே.



பிரிட்டிக்ஷ் குழந்தைகளுக்கு பரவியுள்ள லோக்மியா நோயை ஒழிப்பதற்கு நிதி திரட்டும் முயற்சியாக துவிச்சக்கரவண்டிப் பயணத்தை மேற்கொண்டுள்ள லீயோட்ஸ்காட்

# ஜம்முவில் இந்திய நிலப்பரப்பை ஆக்கிரமிக்கவில்லை; பாக். மறுப்பு

(இஸ்லாமபாத்)

ஜம்மு பகுதியில் இந்திய நிலப்பரப்பை நாங்கள் ஆக்கிரமிக்கவில்லை என்று பாகிஸ்தான் இராணுவ பத்திரிகைத் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் செளகத் சுல்தான் மறுக்கின்றார்.

ஜம்முப் பகுதியில் வெள்ளிக்கிழமை நிருபர்களிடம் அவர் பேசினார். ஜம்மு பகு தியில் இந்திய நிலப்பரப்பை பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமித்ததாக ஜம்மு பிராந்திய எல்லை பாதுகாப்புப்படை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல பி.கே.மிஸ்ரா வியாழக்கிழமை குற்றஞ்சாட்டியிருந்தார். இதற்குப் பதில் அளிக்கும் வகையில் சுல்தான் இதைத் தெரிவித்தார். ஜம்மு பிராந்தியத்தின் சம்பா பகுதியில் பல்லார்ட் பகுதியில் 40 மீற்றர் நிலப்பகுதியை தாக்கித்தான் ஆக்கிரமித்திருந்ததாக அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். பிறகு அப்பகுதியை மீட்டுவிட்டதாகவும் அவர் கூறியிருந்தார். இரு தரப்பிலும் எலலைப்புற அதிகாரிகள் தலைமையில் அடிக்கடி சந்திப்புக் கூட்டங்கள் நடக்கின்றன. அதில் இது போன்ற கருத்துவேறுபாடுகள் தெரிவிக்கப்பட்டு சுமுகமாகவே பேசித் தீர்க்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



தென்கொரியா தலைநகரான சியோலின் வட கொரிய அதிபர் கிம்யோங்கில் என்பவரது உருவப்படத்தை எரிக்கும் ஆர்ப்பாட்டக் காரர்கள்.

# இலவச பாடநூல், சீருடை வழங்கும் நிகழ்வில் வடபகுதி தமிழ் மாணவர்கள் பங்கேற்கத் தடை!

-சனாதிபதி சந்திரிகாவுக்கு பாதுகாப்பு இல்லையாம்-

(அலுவலக செய்தியாளர்)

**அண்மையில் சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இலவச பாட நூல் மற்றும் இலவச சீருடை வழங்கும் வைபவத்தில் சிறிலங்காவின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்ற பொழுதிலும் வடபகுதியைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கு அரசு இறுதிநேரத்தில் தடைவிதித்திருக்கிறது. சனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புக் காரணமாகவே இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.**

இது குறித்துத் தெரியவருகையில் 2005 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல், இலவச சீருடை வழங்கும் சிறப்பு நிகழ்வொன்று கடந்த 29 ஆம் திகதியன்று சனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு வடக்கிலுள்ள கல்விவலய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இதற்கான அழைப்புக்கடிதங்களும் மாணவர்களுக்கான பெயர் கொண்ட அடையாள அட்டை மற்றும் இலக்கங்கள் என்பன கல்வி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பெற்று மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொள்வதற்குத் தயாராகிய வேளையில் பாதுகாப்புக் காரணங்கள் காரணமாக வடபகுதி மாணவர்கள் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டாமென அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் மூலம் வடபகுதி மாணவர்களை மேற்படி நிகழ்வில் கலந்துகொள்ளவிடாது புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இது தமிழ் மாணவர் சமூகத்தைத் திட்டமிட்டுப் புறக்கணிக்கும் அரசின் செயற்பாடாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(சோ)



தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக நேற்று கிளிநொச்சி கனகபுரம் வீதிகளை ஊடறுத்து 8 ஆம் வாய்க்கால் குடியிருப்பு காணிகள் ஊடாக வெள்ளம் பாய்வதனையும் வெள்ளத்தினால் வயல்கள் சூழப் பெற்றுள்ளதனையும் படங்களில் காணலாம். (படம். சோதி)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கணேசபுரம் கிளிநொச்சியை சேர்ந்த தியாகராஜா ஷர்மிளா என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 818421362-V தபால்பெட்டியிலிருந்து கிளிநொச்சி தபாலகத்தினரால் கண்டெடுக்கப்பட்டு கிளி. ஈழ நாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில சமுகம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். (சோ)

## வாழ்வோதய நிதியுதவியுடன் நாற்பது வீடுகள் அமைப்பு

(மன்னார்)

மன்னார் நொச்சிக்குள கிராமத்தில் 40 வீடுகள் வாழ்வோதயத்தின் நிதியுதவியுடன் கட்டி முடித்து வழங்கப்பட்டன. 1990 இல் இக் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து மடு தேவாலயத்தில் அகதியாக வசித்த கஷ்ரப்பட்ட குடும்பங்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தை முன்னின்று செயற்படுத்தியவர் மன்னார் வாழ்வோதய இயக்குனர் அருட்தந்தை எஸ்.ஜேசுராஜா. இது தொடர்பாக அண்மையில் நொச்சிக்குளத்தில் இக் குடும்பங்களுக்கு வீடு வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதில் மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை, வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (18)

## பிரதேச சபை கட்டடம் கரிப்பட்ட முறிப்பில் திறப்பு

(முல்லை)

கரிப்பட்ட முறிப்பில் பிரதேச சபைக் கட்டடம் கடந்த 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதேசங்களின் விசேட ஆணையாளர் செ.தயானந்தா தலைமையில் நிகழ்வு ஆரம்பமானது.

பொது ஈகச்சுடரினை முல்லை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி கிருஷ்ணசாமி ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியினை ஒலுமடுப்பிரதேசப் பொறுப்பாளர் பருதி ஏற்றினார். பெயர்ப்பலகையினை ஒட்டுசுட்டான் பிரதேசச் செயலர் செல்வி சு. கந்தையா திரை நீக்கம் செய்துவைத்தார்.

கருத்துரையினை கௌரவ வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் நிகழ்தினார். நன்றியுரையினை பிரதேச சபை பொறுப்பாளர் ஜான் நிகழ்த்தினார். இக்கட்டடமானது ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை மூலம் முற்றாக அழிக்கப்பட்டிருந்து புனரமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (20)

## இடியன் துப்பாக்கி வெடித்து பெண் ஒருவர் மரணம்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பகுதியில் இடியன் துப்பாக்கி வெடித்து படுகாயத்துக்குள்ளாகிப் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; வெடிக்கும் நிலையில் வீட்டுக்கு வெளிப் பகுதியில் செருகி வைக்கப்பட்டிருந்த இடியன் துப்பாக்கியினை அவரது மகள் தவறுதலாகத் தட்டி வீழ்த்திய போது, அது வெடித்த போது, அருகில் இருந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான முள்ளியவளையைச் சேர்ந்த தருமராசா வள்ளியம்மா(வயது-48) என்பவர் படுகாயத்துக்குள்ளாகி இடது கை முறிந்த நிலையில் அவசர மேலதிக சிகிச்சைக்காக யாழ்.வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட போது மரணமானார். மேற்படி சம்பவம் கடந்த திங்கள் மு.ப 9.45 மணியளவில் இடம்பெற்றது. (ஆ)

## ஒதியமலை படுகொலை நினைவு நாள் பொதுமக்களால் அனுஷ்டிப்பு

(ஒட்டுசுட்டான்)

சிறிலங்கா இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களின் நினைவு நாள கொண்டாடப்பட்டது.

1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினால் ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட இருபதாவது ஆண்டு நினைவு நாள் இம் மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி அருகே நடைபெற்றது.

கடந்த வியாழனன்று காலை 10.00 மணியளவில்ஒதியமலை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச் சுடரினை ஒதியமலை ஆசிரியர் ரவீந்திரன் ஏற்ற, தேசியக்கொடியினை களமுனைத் தளபதிகளுள்ஒருவரான தனுராஜ் ஏற்ற, பொது ஈகச்சுடரினை போராளி அரவிந்தன் ஏற்றி மலர் மாலையினை அணிவித்ததைத் தொடர்ந்து 32 பொது மக்களின் திருவுருவப்படங்களுக்கு உறவினர்கள் சுடர் ஏற்றினர்.இதில் கருத்துரைகளை கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் கந்தசாமி தனுராஜ் ஆகியோர் வழங்கினர். (05)

## சிறிலங்கா அரசாங்கம் யுத்தத்தையே நாடி நிற்கின்றது இதனையே அதன் நடவழிக்கைகள் வெளிப்படுத்துகின்றன

மன்னார் பொது அமைப்புக்கள் கண்டனம்

அரசு யுத்தத்தையே நாடி நிற்கிறது.என்ற உறுதியான நிலைப்பாட்டைத் தற்போதைய அரசின் நடவடிக்கைகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. இவ்வாறு மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், பொதுமக்கள் மன்றம், தொழிற்சங்கங்களின் இணையம் மற்றும் வர்த்தகர் சங்கம் என்பன கூட்டாக கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த 2ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து வந்த போர் நிறுத்தம் காரணமாக தமிழ்மக்கள் அனுபவித்து வந்த இன்னல்கள் ஓர் முடிவிற்கு வந்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை எம் மக்கள் மனதில் தளிர் விட்டிருந்தது. ஆனால் தொடர்ந்து நடைபெற்று வரும் செயல்கள், அரசு யுத்த நிறுத்த கால அமைதியைப் பயன்படுத்தி தென்னிலங்கையில் அமைதி வாழ்வும், பொருளாதார சுபீட்சமும் நிலைபெறவும், அதேவேளையில் வெளிநாடுகளுடன் பாதுகாப்பு உடன்படிக்கை மற்றும் வர்த்தக உடன்படிக்கைகளின் மூலம் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் புலிகளுக்கு எதிரான வெளிநாட்டு வல்லரசுகளின் அக்கறையை அதிகரிக்கவுமான முனைப்பான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசு-புலிகள் சமபலநிலை பாதிக்கப்படும் வகையில் வெளிநாடுகளுடனான இராணுவ உதவி ஒப்பந்தங்களையும் பெருந்தொகையான ஆயுத கொள்வனவுகளையும் அரசு மேற்கொள்வது அரசு யுத்தத்தையே நாடி நிற்கின்றது. என்ற உறுதியான நிலைப்பாட்டை காட்டுவதாக உள்ளது.

மேலும் மாற்றுத் தமிழ் குழுக்களின் பெயரால் அரச கட்டுப்பாட்டு பகுதிகளில் நிராயுதபாணிகளாக அரசியல் பணி களில் ஈடுபட்டுள்ள புலி உறுப்பினர்கள் மேல்தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை கொன்றொழிக்கும் செயல்களில் படைத்தரப்பினர் ஈடுபடுவது அப்பட்டமான போர் நிறுத்த மீறலாகும். மேலும் குறித்த காலப்பகுதியில் வடக்கு கிழக்கில் இயங்கும் மாற்றுக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்ற புரிந்துணர்வு ஒப்பந்த நிபந்தனை இதுவரை அரசினால் நிறைவேற்றப்படவில்லை. அரசதரப்பிலான மிகப்பெரிய புரிந்துணர்வு ஒப்பந்தமீறல் இது என்பதுடன் இவ் மீறலே இப்பிரச்சினைக்கு காரணம் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் இன்னோர் அடிப்படைத் தேவையான மக்களின் இயல்புவாழ்வை உறுதி செய்யும் வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேற்றம் ஒப்பந்த நாளிலிருந்து 160 நாட்களுக்கிடையில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் ஆயிரம் நாட்கள் கடந்த நிலையிலும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்கள் வாழ்விடங்களை படையினர் ஆக்கிரமித்திருக்க அம்மண்ணின் உரித்தானவர்களான தமிழ் மக்கள் இருக்க இடமின்றி அநாதரவாக, அகதிகளாக, அலைந்து திரியும் அவல நிலை தொடர்கிறது.

இது மட்டுமன்றி தமிழ் மக்கள் தமக்குக் இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் குரல் எழுப்பவும் ஆத்மாத்த பூர்வமாக தாம் செய்ய விரும்பும் நிகழ்ச்சிகளை நடத்தவும் தடைவிதித்து அரச படைதரப்பால் செய்யப்படும் அடாவடித்தனங்கள் எல்லை மீறிச் செல்கின்றன. எனவே தமது இன விடுதலைக்காக தம்முயிரை பலிகொடுத்த 17500இற்கும் அதிகமான தமிழ் இளைஞர்களின் ஆன்மாக்களுக்கு அஞ்சலி செலுத்த மக்கள் ஏற்பாடு செய்த நிகழ்வுகளைத் தடுத்து மன்னாரிலும், வவுனியாவிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் புலிக்கொடி ஏற்றப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது என்று ஒப்பந்தத்தில் இல்லாத ஓர் பொய்யான நிபந்தனையைக் கூறி நிராயுதபாணிகளான மக்களையும் அரசியல் பணி செய்ய வந்த போராளிகளையும் கடுமையாகத் தாக்கியதுடன் பொதுமக்கள் உடமைகளையும் சேதப் படுத்தி உள்ளமை.

*தமிழர் இன உணர்வுகளைப் பிரதிபலிக்கும் தேசியக் கொடியை படையினர் அவமதித்தமை

* வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக் கொன்றமை.

*ஊடகவியாலாளர்கள் தாக்கப்பட்டமை.

*இடைக்கால நிர்வாக ஏற்பாட்டைவேண்டுமென்றே அரசு தாமதப்படுத்தியமை.

என்பனவற்றுக்கெதிராக மக்களின் ஏகோபித்த எதிர்ப்புணர்வையும் அதிருப்தியையும் அரசுக்கும் உலகிற்கும் காட்டும் வகையில் மன்னாரில் மக்கள் அமைப்புக்கள் அனைததும் ஒன்று திரண்டு பூரண ஹர்த்தாலை நடத்துகின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# மாவீரர் நாள் உரையில் இரண்டு முக்கிய கேள்விகள்

தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் இவ்வருட மாவீரர்தின உரையானது கடந்தகால மாவீரர்தின உரைகளிலிருந்து அடிப்படையில் முற்றிலும் வேறுபாடானது. இதனைச் சுருக்கமாகக் கூறுவதானால் கடந்தகாலத்தில் விடுதலைப் புலிகளின் கொள்கை விளக்கங்களையும், நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தும்ஒன்றாக அமைந்திருந்த மாவீரர்தின உரைகள் இம்முறை சிறிலங்கா அரசியல் கட்சிகளின், சிறிலங்கா ஆட்சியாளர்களின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கை என்ன? நிலைப்பாடு என்ன? எனக் கோருகின்றது.

தேசியத்தலைவரின் இவ்வருட மாவீரர்தின உரையானது சிறிலங்கா அரசியற் கட்சிகளையும், சிறிலங்கா ஆட்சியாளரையும் நோக்கி இரண்டு முக்கியமான கேள்விகளை முன்வைத்திருக்கின்றது.

01 "சனாதிபதி சந்திரிகாவிடமும், அவர் கூட்டணி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும், எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றது. அதாவது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைகளின் அடிப்படைகள் குறித்து அவர்களது மூவகைக் கொள்கைகளான தாயகம், தேசியம் சுயநிர்ணய உரிமைகள் குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப் படுத்துங்கள".


02 "இடைக்காலத்தீர்வுமின்றி. நிரந்தரத் தீர்வுமின்றி நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி நாம் தொடர்ந்தும் அரசியல் வெறுமைக்குள் சிறைப்பட்டுக்கிடக்கமுடியாது..., பொறுமைக்கும் எதிர்பார்ப்பிற்கும் எல்லைக்கோடுகள் உள்ளன.அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் சிறிலங்கா அரசாங்கத்திற்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்கின்றோம். அதாவது நாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில் நிபந்தனையற்ற முறையில் காலந் தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம" .

இவ்விரண்டு கோரிக்கைகளும் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வொன்றைக் காண்பதற்கும் சரி, தமிழ் மக்கள் தற்பொழுது எதிர்நோக்கியுள்ள அவசரமனிதாபிமான உதவிகளை உடனடியாக மேற்கொள்வதற்கும் சரி மிகமிக அவசியமானவையும், அடிப்படைத் தேவையுமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு -அதாவது இனப்பிரச்சினைக்கு நிரந்தரமானதும் இறுதியுமானதொரு தீர்வொன்று காணப்பட வேண்டுமானால் அது தமிழ் மக்களின் தாயகம். தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றின் அடிப்படையிலேயே காணப்பட வேண்டும், முடியும். இது விடுதலைப் புலிகளினால் தற்பொழுது முன்வைக்கப்பட்ட ஒரு கோரிக்கையல்ல.

இது 1985 இல் திம்பு மாநாட்டிலேயே முன்வைக்கப்பட்ட தொன்றாகும். அதாவது இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே இது முன்வைக்கப்பட்ட தொன்றாகும். இதில் விடுதலைப் புலிகள் இயக்கம் எவ்வேளையிலும் எந்தநிலையிலும் மாற்றமெதையும் செய்ததுமில்லை, செய்யத் தயாராகவுமில்லை.

ஆகையினால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வென்பது இதனடிப்படையிலேயே சாத்தியமாகக் கூடியதாகும். இதனை நிராகரிப்பவர்கள் அன்றி ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் / மறுக்கும் அரசாங்கங்கள் எதனுடனும் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியும் பயனில்லை. இவை தொடர்பாக இதுவரையில் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வந்த தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் இம்முறை இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவே ஆவல் கொண்டுள்ளதாகத் தெரிவித்துவரும் சனாதிபதி சந்திரிகாவிடம் இவை குறித்த தங்களின் நிலைப்பாடு என்ன எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது ஒருபுறத்தில் கேள்வியாக இருப்பினும் இன்னொரு புறத்தில் இறுதித்தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாகவும் கொள்ளத்தக்கதாகும். அதாவது இவற்றை அங்கிகரிக்கும் கட்சிகள், அரசாங்கங்களுடனேயே இறுதித்தீர்வு பற்றிப் பேச முடியும். மறுவளமாகக் கூறுவதானால் இவற்றை அங்கிகரிக்காத கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்பது அர்த்தமற்றதொன்று என்பதே விடுதலைப் புலிகளினால் மறைமுகமாகத் தெரிவிக்கப்படுமொன்றாகும்.

இத்தகையதொரு நிலையில் தான் சிங்கள அரசியல் கட்சிகள், ஆட்சியாளர்கள் இடத்தில் இவை குறித்த தமது நிலைப்பாட்டை முன்வைக்குமாறு தேசியத்தலைவர் அவர்களினால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு பற்றியே சனாதிபதி சந்திரிகா ஆவல் கொண்டிருப்பதாகத் கூறும் அவரின் ஆலோசகரோ அன்றி ஆளும் கட்சியினரோ நேரடியாக அது குறித்துத் தமது பதில் எதையும் அளிக்கவில்லை.

தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களின் மாவீரர்தின உரைக்குப் பதில் அளிப்பது போன்று அறிக்கை வெளியிட்ட தகவல் திணைக்களமும் இதற்குப் பதில் எதுவும் கூறியதாக இல்லை. ஆனால் இக்கேள்வியானது தனியாக ஆளும் கட்சியிடமோ, கூட்டணியிடமோ முன் வைக்கப்படவில்லை. சகல அரசியல் கட்சிகளிடமுமே விடுக்கப்பட்டதாயினும் எக்கட்சியினரும் இது குறித்து இதுவரை பதில் அளிக்கவில்லை.

குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியும், அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டே இனப்பிரச்சினை விடயத்தில் எதிர்க்கட்சி போன்று செயற்படும் ஜே.வி.பி.யும் கூட இது குறித்துப் பதில் எதுவும் அளிக்கத் தயாராக இல்லை. இந்நிலையில் எழும் முக்கிய கேள்வியானது இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்கள் என்பது எதைப் பற்றியது? எது குறித்துப் பேசுவது? என்பதாகும்.

இரண்டாவதாகத் தேசியத்தலைவர் வலியுறுத்திய விடயமானது தமிழ் மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் செயற்படத்தக்கதான விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைத்த தன்னாட்சி இடைக்கால நிர்வாக சபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது பற்றியதான முடிவை உடனயடிாகத்தெரியப்படுத்த வேண்டுமென்பதாகும்.

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்டவரைபானது இனப்பிரச்சினைத்தீர்வையும், சமாதான முயற்சிகளையும் முன்னோக்கி நகர்த்தத் தக்கதென்பது வெளிப்படையானதொன்று ஆனால் இவ்விடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டமானது தமிழீழ தனியரசொன்று உருவாவகுதற்கான அடித்தளமாகிவிடும் என்பது இதற்கெதிராக ஆளும்தரப்பால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டாக உள்ளது.

ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் இக்குற்றச்சாட்டை மறுப்பது மட்டுமல்ல, தாம் முன்வைத்த தன்னாட்சி இடைக்கால அதிகார சபை குறித்த

## சமாதானமா? யுத்தமா? அரசே தீர்மானிக்க வேண்டும்!

நகல்திட்டத்தில் அரசதரப்பிற்கு ஆட்சேபம் உள்ள பகுதிகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தித் தீர்வொன்றைக் காணலாம் என வலியுறுத்தி தெரிவித்துவருகின்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான நகல்திட்டமானது பொதுப்படையாக வெளிநாடுகளினால் வரவேற்கப்பட்டதொன்றாகும். இந்நகல் திட்டம் முன்வைக்கப்பட்டபோது பல உலக நாடுகள் இத்திட்டம் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கப்போதுமானதென்று அபிப்பிராயமும் தெரிவித்திருந்தன.

அத்தோடு இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்குவதென்பது சர்வதேச ரீதியில் புதியதொரு முன்னுதாரணமும் அல்ல. இதன் காரணமாகவே சர்வதேச சமூகம் இத்தகையதொரு இடைக்கால நிர்வாக சபைக்கு தமது ஆதரவைத் தெரிவித்திருந்தன.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்வாறானதொரு நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. இதற்கு ஆளும் கூட்டணிக் கட்சிகளுக்குள் இனப்பிரச்சினை தொடர்பான தெளிவான நிலைப்பாடு இன்மையே காரணமாகும். இந்நிலையிலேயே இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான யோசனைகள் குறித்து ஆளும் கூட்டணியினால் ஒரே குரலில் பேசமுடியாதுள்ளது. மாறாக இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்பது தனிநாட்டுக் கோரிக்கையை நிறைவு செய்வதற்கான அடிப்படையாகிவிடும் எனக் கூக்குரல் இடுகின்றன. இதன் மூலம் யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள தமிழ் மக்களின் உடனடி அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்வதில் கூட அவை அக்கறை காட்டத் தயாராக இல்லை.

இதேவேளை தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதற்கு ஐ.தே. கட்சி முன்வந்துள்ளது. இவ் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான திட்டங்களை ஐ.தே. க முற்றாக ஏற்றுக் கொள்ளாது போனாலும் இடைக்கால அதி காரசபை நகல்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் ஐ.தே. கட்சி ஆளும் தரப்பிற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயராக உள்ளதென தெரியப்படுத்தியுள்ளது. ஆனால் ஐ.தே.க.வின் நிலைப்பாடு ஆளும் தரப்பில் ஏற்றுக்கொள் ளப்படுவதாக இல்லை.

இவ்வாறாக இவை முரண்படுகையில் தமிழீழத் தேசியத்தலைவரின் இவ்வருட மாவீரர்தின உரையானது இரண்டு அடிப்படைக் கேள்விகளைக் கொண்டதாக இருப்பினும் இதன் ஒரே அர்த்தமானது இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து சிங்களக் கட்சிகளே உங்கள் நிலைப்பாடு என்ன? என்பதேயாகும். அதாவது தமிழ் மக்கள் தொடர்ந்தும் "இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி நிலையான அமைதியுமின்றி நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக்கிடக்க முடியாது" என்பதினால் தமிழ் மக்கள் தமது எதிர்காலம் குறித்து தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்திற்குள் வந்துவிட்டார்கள் என்பதேயாகும்.

ஆகையினால் சிங்கள ஆட்சியாளர்களும் சரி சிங்கள அரசியல்கட்சிகளும்சரி நிரந்தரத்தீர்வுபற்றித்தான் பேசுவோம் என்றோ, இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு தனிநாட்டிற்கு வழிவகுக்கும் எனக் குற்றச்சாட்டுக்களைக் கூறுமுன்பாகவோ தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் முடிவுகள் என்ன என்பதைக் கூறுவதையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அதாவது நிரந்தரத்தீர்வென்பது தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவை அங்கீகரிக்கப்படாத நிலையில் சாத்தியமாகப்போவதில்லை. மறுபுறத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் எவையுமின்றி தமிழ் மக்களின் துயர வாழ்வும் இழுபட்டுச் செல்வதற்கும் இனி அனுமதித்தல் என்பது சாத்தியமற்றதொன்று. என்பவையே தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரைமூலம் வெளிப்படுத்திய முக்கிய அம்சங்களாகும்.

ஆகையினால், இனி இனப்பிரச்சினை தொடர்பாகவும் இலங்கையின் எதிர்காலம் தொடர்பான தீர்மானங்களை சிறிலங்கா ஆட்சியாளர்களே மேற்கொள்ள முடியும் - அதாவது தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளையும் தேவைகளையும் ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதா? அன்றி நாட்டை மீண்டும் யுத்தத்திற்குள் இட்டுச் செல்வதா? என்பதை சிறிலங்கா ஆட்சியாளகளே தீர்மானிக்க வேண்டும்.

ஜெயராஜ்

□□

# பேசாலை புனித வெற்றி நாயகி அ

## புனித வெற்றி நாயகி ஆலயத்தின் சில குறிப்புக்கள்

01) கடவுள் கிருபையால் வேலை ஆரம்பித்தது 07.01.2001 மன்னார் வந்தனைக்குரிய ஆயர் இவ்வேலையை ஆரம்பித்து வைக்க பொது மக்கள் தொடர்ந்தனர்.


02) அன்னையின் ஆலய கட்டுமானப் பணி நிறைவும், திறப்பு விழாவும் அபிஷேகமும் 05.12.2004 இல் நடைபெற்றது.

03) ஆலயத்தின்...

முகப்பு அகலம் 90 அடி
(அளவு மாற்றப்படவில்லை)
முகப்பு உயரம்-65 அடி
(அளவு மாற்றப்படவில்லை)
நீளம்-222 அடி
(அளவு மாற்றப்பட்டது)
டோம் உயரம் 75
(அளவு மாற்றப்பட்டது)
கைக்கோயில் பரப்பு 4900 சதுர அடி
பீடம் - கைக்கோயில்
(அளவு மாற்றப்பட்டது)
நடுக்கோயில் பரப்பு 11,174 சதுர அடி
(அளவு மாற்றப்பட்டது)
பல்கணி பரப்பு 918 சதுர அடி
(புதிதாக உருவாக்கப்பட்டது)
தற்போது கோவிலின் முழுப்பரப்பு
17000 சதுர அடி
(உட்புறம் மட்டும்)



### வந்தனைக்குரிய ஆண்டகை இராயப்பு யோசேப்பு D.D அவர்களின் ஆசிச்செய்தி




பேசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அழகும் அமைப்பும் நிறைந்து திகழும் வெற்றிநாயகி ஆலயத்தை வழிபாட்டிற்காக அர்ச்சித்து திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாலயத்தை அர்ச்சித்து ஆசீர்வதிப்பதற்காக திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதி மேன்மை தங்கிய மாறியோ செனாரி ஆண்டகை அவர்கள் வருகை தருவது பேசாலை பங்கு மக்களுக்குமட்டுமல்ல மறைமாவட்டம் முழுவதற்குமே மகிழ்ச்சி அளிக்கின்ற ஒரு பெரும்பேறாக அமைந்துள்ளது.

இலங்கையில் கிறிஸ்தவம் எவ்வளவு பழமை வாய்ந்ததோ, அவ்வளவு பழமை வாய்ந்து இப்பேசாலை மக்களின் விசுவாசம் எனலாம். இந்நிகழ்வின் மகிழ்ச்சியில் பெருமையோடு நான் கலந்து கொண்டு என் அன்புமிகுந்த பேசாலைப் பங்கு மக்களுக்கு எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

பேசாலை மக்களது சமயப்பற்றையும், விசுவாச உறுதியையும், அவர்கள் அன்னை மரியாள் மீது கொண்டுள்ள அளப்பரிய அன்பையும், தம் மத்தியில் கொண்டுள்ள அன்புறவையும், வெளிக்காட்டுவதாகவே இவ்வாலயம் அமைந்துள்ளதைக்காண்பது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியைத்தருகின்றது. இறைவன் உயிருள்ள கற்களாகிய மக்களைக் கொண்டே வனப்புறு ஆலயம் அமைக்கின்றவர். நாம் அமைத்துள்ள இவ்வாலயமோ அதற்கு ஓர் வெளி அடையாளமாகத்திகழ்கின்றது. இந்த ஆலயத்தின் ஊடாக மக்களின் உள்ளங்கள் ஆண்டவர் யேசுவிற்கு மென்மேலும்திறந்து விடப்படவும், வெற்றி அன்னையை அண்டி வருவோர் அனைவருக்கும் இது ஓர் ஆறுதலின் ஊற்றாக அமையவும், ஆசித்து எனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் எனது அன்புக்குரிய பங்குத்தந்தையர்க்கும், பங்கு மக்களுக்கும் மன நிறைவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.



அருட்பணி
அ.ஜீவேந்திரா போல் அ.ம.தி.

பேசாலை புனித வெற்றி நாயகி அன்னையின் ஆலய அபிஷேகத் திருவிழாவின் இறையாசீரும், அருளும் அப்பங்குத்தலத்தின் மக்கள் மீது நிறைவாகப் பொழியப்பட இறை தந்தையை இறைஞ்சுகின்றோம்.
குறுகிய காலத்தில் பாரியதோர் பணியை நிறைவு செய்து கனவுகள் நனவாகிவிட்டன. கடின உழைப்பு பலன் கொடுத்துவிட்டது என்று அன்னையின் மக்கள் உளப் பூரிப்பு கொள்ளும் இவ்வேளையில், அமலமரித் தியாகிகள் நாமும் அப்பெரும் மகிழ்வில் கலந்து கொள்வதில் ஆனந்தம் அடைகின்றோம். இக்கோவில் கட்டும் பணியை ஆரம்பித்து நிறைவு செய்யும் வேளையில் பங்குக்குருவாகவும். களத்தின் தளபதியாகவும் விளங்கி வெற்றிப் பூரிப்பில் திளைத்து நிற்பவர் ஓர் அமலமரித் தியாகி அருட்பணி வின்சன்ட் பற்றிக் அவர்களே எனக் காணும்பொழுது ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் என அமலமரித் தியாகிகள் குடும்பம் இரட்டிப்பான மகிழ்ச்சி அடைகிறது.

பேசால
நீண்டதொரு
பணியாளர்களாகவு
பணியாற்றியுள்ள
பங்குத்தலத்தின்
மனதில் இறை உ
கட்டியெழுப்பியுள்ள
அமலமரித்தியாகிக
கொண்டுள்ளது.
குருமாணவர் ஏன்
எந்தவித வேற்று
இருகரம் விரித்து
என்ற உறவில்
யாளர்களுடன்
சிறப்பாகும். அன்
ஒவ்வொரு பரு
தேவைகளுக்குமேற்

# லயத்திறப்புவிழாவும் அபிஷேகமும்

**05-12-2004**



... தலத்தில் 'அமலமரித்தியாகிகளுக்கென ...ண்டு. பங்குகுருக்களாகவும். களத்தின் ...ாலமாக பல்வேறு அமலமரித்தியாகிகள் ...வாருவரும் தத்தமது ஆற்றலுக்கும் ...குமேற்ப உரிய முறையில் இறைமக்கள் ... மரியாள் பக்தியையும் ஆன்மீகத்தையும் ...பசாலை பங்குத்தலம் இதுவரை ஏழு ...பித்த பெருமையையும் தன்னகத்தே ...ள அனுப்பப்பட்ட குருக்கள். துறவியர், ...லயினர் என எவரெவர் களம் இறங்கினும் ...இன்முகத்துடனும் திறந்த உள்ளத்துடனும் ... சகோதரர்கள், பிள்ளைகள், அடியார்கள் ...ங்கு விருந்தோம்பல் செய்வதும் பணி ...ும் பேசாலை இறைமக்களின் தனிச் ...திச்சபைகள், கழகங்கள், ஒன்றியங்கள் என ...க்கும் அவரவர் ஆற்றல்களுக்கும் ... குழுமங்களாக இயங்கி ஆலயத்தைக் கட்டியெழுப்பியது. அன்பிய வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்பதாக அமைகிறது.

ஓர் ஆலய அபிஷேக விழா என்பது இறைவன் தம் மக்களை அருங்கொடைகளால் நிரப்புவதாகும். அதாவது இறைவன் தம் மக்கள் மத்தியில் கோவில் கொண்டு தாய்ப்பறவை இறக்கைகளுக்குள் தன் குஞ்சுகளைக்காப்பது போல் இறைவனது இறக்கைகளுக்குள் இறைமக்கள் தஞ்சம் புகுதல் என்று பொருள்படும்.

இத்தகைய உன்னத இறையனுபவத்தை பேசாலை வாழ் இறைமக்கள் தம் வாழ்வில் சுவைக்க அமலமரித்தியாகிகள் குடும்பத்தின் சார்பில் இனிய வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

அருட்பணி அ.ஜீவேந்திரா போல் அ.ம.தி.
மாகாண முதல்வர்
அமலமரித் தியாகிகள்
யாழ்ப்பாணம்,

**திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி மகா மேன்மை தங்கிய மாறியோ செனாரி ஆண்டகை அவர்களால் அபிஷேகம் செய்யப்படும்.**





**வண. வின்சன்பற்றிக் அடிகளார். (அ.ம.தி)**

பங்குத்தந்தையின் இதயத்திலிருந்து..

இறைவனுக்கே மகிமை! இயேசுவுக்கே புகழ்!

நல்ல எண்ணங்கள் நல்ல உணர்வுகளைத் தோற்றுவிக்கும். நல்ல உணர்வுகளே நல்ல வாழ்விற்கே ஆதாரம். நல்ல எண்ணங்கள், நல்ல உணர்வுகள், நல்லவாழ்வு இவையனைத்திற்கும் ஆதாரமாய் இருப்பது ஆலயமாகும். இந்த வகையில் பேசாலை வாழ் மக்களின் உயிரோவியமாக வடிக்கப்பட்ட புனித வெற்றியன்னை ஆலயம் எல்லோர் உள்ளங்களிலும் அழியாத அடையாளமாக இவ்வாலயம் அமைந்துள்ளது என்பதே உண்மையாகும். இது கத்தோலிக்க விசுவாசிகளின் தியாக செயற்பாட்டிற்கு வரையறையில்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. எம் முன்னோர் விசுவாசத்திற்காக சிந்திய இரத்த வித்துக்களிலிருந்து முளைத்திட்ட எம்மக்கள் வாழையடி வாழைகளாய் விசுவாசத்தை வாழ்வாக்குவதில் என்றுமே பின்வாங்கியதில்லை என்பதை இத்தால் மீண்டும் எண்பித்துள்ளார்கள்.

இப்பாரிய பணியில் பேசாலை மக்கள் ஒவ்வொருவரும் பல்வேறு வகைகளில் பங்களிப்புச் செய்துள்ளார்கள். சிலர் இலை மறைகாய்போல்இருந்து கொண்டு பெரும் உதவிகள் செய்துள்ளார்கள். சிலர் பொன் என்றும், பொருள் என்றும், பணம் என்றும், உடலுழைப்பு என்றும் பல்வேறு வடிவங்களில் அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளார்கள். ஆலய மேய்ப்புப்பணிச்சபையினர், பக்திச்சபையினர், கழகங்கள், கரவலை சம்மாட்டிமார், விடுவலை சம்மாட்டிமார், பிளாஸ்டிக் போட் சம்மாட்டிமார், இழுவைப்படகு சம்மாட்டிமார், தொழிலாளர்கள், தெப்பக்காரர், வர்த்தகர்கள், வாகன உரிமையாளர்கள், வாடி உரிமையாளர்கள், அரச அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், புலம்பெயர்வாழ் இவ்வூர்மக்கள், ஓய்வூதியம் பெறுவோர், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள், சிறுமியர்கள், அயல்கிராமமக்கள், வெளியூர் நலன் விரும்பிகள் என்று உதவி செய்தவர்களின் பட்டியல் நீண்டுகொண்டு போவது தவிர்க்க முடியாததே. இவ்வாறு எல்லா மட்டங்களிலிருந்தும் ஒருமைப்பட்டவர்களாய் புன்சிரிப்புடன் ஓடிஓடிச் செயற்பட்ட அதிசயத்தை என் இதயம் என்றுமே மறவாது, ஆலயச் சிரமதானம் என்றதும் சின்னஞ் சிறுசுகளில் பளிச்சிடும் ஆர்வ உணர்வலைகள் என் உள்ளத்தை தொட்ட நீங்காத நினைவலைகளாய் தொடர்வதை உணர் கின்றேன்.

பேரன்பிற்கும் பெரும் மதிப்பிற்குமுரிய எமது ஆயர் இரா.யோசப்பு ஆண்டகை அவர்கள் வெற்றியன்னை ஆலயத்தை அழகுற அமைப்பதில் முழுஆதரவையும் நல்கி, முன்னின்று வழிகாட்டியாய் செயற்பட்டு, இம்முயற்சியினை நிறைவாக்கினார். அவர்களுக்கு எமது உளம்கனிந்த நன்றிகள். இவ்வாலயத்தை அர்ச்சித்து ஆசீர்வதித்தருளிய திருத்தந்தையின் பிரதிநிதி மேன்மை தங்கிய மாறியோசெனாறி ஆண்டகை அவர்களுக்கும், ஆலய உருவாக்கத்திற்கு தொடர் ஊக்குவிப்பு வழங்கிய அமல மரித்தியாகிகள் சபை வடமாகாண முதல்வர் ஜீவேந்திராபோல் அ.ம.தி. அவர்களுக்கும்,மன்னார்மறைமாவட்ட குருமுதல்வர் சேவியர்குருஸ் அடிகளாருக்கும், மன்னார் மறை மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்துக்குருக்கள்,துறவியருக்கும், இக்காலப் பகுதியில் பேசாலையில் தோளோடு தோள் நின்று உதவிப் பங்குத் தந்தையராய் பணியாற்றிய அருட்தந்தையர்கள் சீமான் மரியதாசன், அருட்தந்தை வென்சஸ்லோஸ் அ.ம.தி., அருட்தந்தை ரெட்ணராஜா அ.ம.தி, அருட்தந்தை மரிடீகோல், அருட்தந்தை அன்ரன் ஆகியோருக்கும், திருக்குடும்பசபை சகோதரிகள், டோமினியர்சபைச் சகோதரிகள், ஊர்மக்கள், நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் என் அன்பு கனிந்த நன்றிகள்.

மேலும் ,எமது ஆலயத்தை அழகுற வடிவமைத்த பொறியியலாளர் திரு. தவராஜா அவர்களை நன்றியோடு நினைவு கூர்வதோடு ஆலயகட்டுமானப்பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்த கட்டடக்கலைஞர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகஇறைவனின் ஆசீரும், தொடர் வழிகாட்டுதலும் எமக்குஎல்லா வேளைகளிலும் கிடைத் தமை ஓர் அற்குதம். அந்த இறைவனையே மகிழ்வோடு துதித்து, அதே தேவன் நம் அனைவரையும் ஆசீர்வாதத்தையும் அன்னையின் பரிந்துரையையும் வேண்டிநிற்கிறேன்.

**பங்குத் தந்தையார்**
**பங்குமக்கள்**
**பேசாலை.**

இந்திய அரசியலை இப்போது மையம் கொண்டிருப்பது காஞ்சி சங்கராச்சாரியாரின் கைது தான்! தமிழகத்தில் மையம் கொண்ட இந்த கைது விவகாரம் இப்போது படிப் படியாக மத்தியரசை நோக்கியே நகர்ந்துள்ளது எனலாம்.

எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாவோ ஜெயேந்திரரின் கைது விவகாரத்தை மிகவும் பாரதூரமாக தூக்கியுள்ளது என்றே தோன்றுகிறது இல்லையேல் விலைவாசி உயர்வு எனும் போர்வையினூடாக அக்கட்சி ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என்ப வற்றை நடத்த முற்பட்டிருக்க முடி யாது!

தமிழக அரசால் ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டாலும் மதத்தின் பெயரால் அது அரசியலுக்குள் புகுந்து விட்டது போன்று தான் நிலைமைகள் இருக்கின்றது.

அதுமட்டுமன்றி இதுவரை

*. ஜம்மு காஷ்மீர் விவகாரம்

*. பொடோ சட்டம் வாபஸ்

*. உள் நாட்டுப்பாதுகாப்பில் அரசின் தவறான கொள்கை.


போன்ற விடயங்களை வலி யுறுத்தி ஆர்ப்பாட்டம் செய்வ தாகப் பாரதிய ஜனதா கூறிக் கொண் டாலும், உண்மையில் சங்கராச்சாரி யாரின் கைது விவகாரத்தை மைய படுத்தியே இந்த ஆர்ப்பாட்டம், ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்ட தாகக் காண முடிகின்றது

ஏனெனில் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற் பவே பெற்றோலிய விலையின் ஏற்ற இறக்கம் இருப்பதாகக் கூறப் படுகின்றது. அப்படி இருக்கும் போது மத்தியரசு பெற்றோல் விலையை அதிகரித்துள்ளதாகப் போராட்டம் நடத்துவது ஏற்பு டையதா........ என்றுதான் சந்தேகம் குத்தூபம் போடுவது போன்றுதான் புகையிரத துறை அமைச்சர் லல்லுப் பிரசாத் மத்தியமைச்சர் பஸ்வானு டன் வாய்ச் சண்டையில் ஈடுபட் டதும் சேர்ந்து விட்டது எனலாம்.

ஏனெனில் பாரதிய ஜனதா வினுள் உட்கட்சிப் பூசல் நிலவு வதாக ஏற்கனவே நம்பப்பட்டது. இந்த நிலையில் தம்மைத் திருத்த வேண்டிய பாரதிய ஜனதா அதை விட்டு மத்தியரசிடம் கைவைப்பது எந்த வகையில் நியாயம் என்று காங்கிரஸ் பொருமுவதையும் காணமுடியும்.

எனவே அங்குதொட்டு இங்கு தொட்டு பாரதிய ஜனதா கட்சியின் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் சங்க ராச்சாரியாரின் கைதை முன்னிட்டே அன்றிவேறில்லை. ஏனைய பிரச்சி னைகள் சப்புச்சவரியே தவிர அவை கனமானவையும் அல்ல என்றே அவதானிப்பு இருக்கின்றது.

நிலைமை ஒன்றையும் அவதானிக்க முடிகின்றது தமிழக அரசுதான் சங்க ராச்சாரியாரைக் கைது செய்திருக் கின்றது. ஆனால் வாலை விட்டுத் தும்பைப்பிடிப்பது போல தமிழக அரசை விட்டு விட்டு மத்தியரசே சங்கராச்சாரியாரின் கைதுக்குக் காரணம் என்பது போன்றே எதிர்க் கட்சிகளின் நடத்தை செயற்பாடு அமைந்திருப்பதையும் காண முடியும் அத்துடன் தமிழகத்திலும் மத்தி யிலும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடக்கின்றது என்றால் கூட எதிர்க் கட்சிகள் மத்தியரசிடம் சங்கராச் சாரியார் கைது குறித்து மல்லுக் கட்ட முடியும் ஆனால் அந்த நிலை மையும் இல்லை.



அத்வானி

ஆனால் இரண்டு வருடத்திற்கு முன்னர் கூட இதே அ.தி.மு.க ஆட்சியில் தான் சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் தொடர்பான குற்றங் கள் நடந்திருக்கின்றது என்பதையும் மறந்துவிடலாகாது.

எனவே அப்போது வாளா விருந்த அதிமுக அரசு இப்போது மட்டும் ஏன் எண்ணெயில் போட்ட அப்பளமாகத் துள்ளிக் குதிக்கின்றது எனும் சந்தேகமும் தொக்கு நிற்காமலில்லை.

# ஜெயேந்திரர் விவகாரம் பா.ஜ.க.வின் புதிய ஆயுதம்

அ.கலைவாணி



மத்தியரசை எதிர்ப்பதற்கு காரணம் தேடிக் கொண்டிருந்த பாரதிய ஜனதா வோ இதுதான் தருணம் என்று ஜெயேந்திரர் கைது விவகாரத்தை தமக்கு சார்பாக தூக்கியிருப்பது தான் உண்மை. இல்லையேல் இது வரை காலமும் எதிர்க்கட்சிகள் ஊழல் அமைச்சர்கள் மத்தியரசில் இருப் பதாக கூச்சலிட்டுவந்தன. இப்போது அதனைப் புறம் தள்ளி புதிய பிரச்சி னையாக ஜெயேந்திரர் கைது சரி யானது அல்ல என்று புதிய கோஷமொன்றை எழுப்பியுள்ளன. ஆனால் அதனை வெளிப்படை யாகக் கூறாது இலை மறை காயாக விலைவாசி உயர்வு போராட்டம் என்று தொடங்கி இறுதியில் ஜெயேந்திரர் கைது விவகாரத்தை மிகவும் வலுவாகக் கண்டித்திருப் பதை அவதானிக்க முடியும்

இரண்டு நாட்களுக்கு முன்னர் வாஜ்பாய், அத்வானி தலைமை யில் பாரதிய ஜனதா கட்சிப் பாரா ளுமன்ற தடையையும் மீறி ஊர் வலம், ஆர்ப்பாட்டம் நடத்தின.

*. விலைவாசி உயர்வு

*.சங்கராச்சாரியார் கைது

*.மத்தியமைச்சர்கள் லல்லுப் பிசாத்-பஸ்வான் மோதல்

*.ஊழல் அமைச்சர்கள் மத்தி யரசில் அங்கம் வகித்தல்

பரவலாக உலாவுகின்றது.

அது மட்டுமன்றி எதிர்க்கட்சி பொடோ சட்டம் வாபஸ் பெறப்பட்ட போது அறிக்கைப் போர் மட்டும் நடத்தியது. இப்போது பொடோ சட்டம் எனும் சட்டமே மக்கள் மனதி லிருந்து மறைந்து விட்டது என்று தான் கூறவேண்டும். இந்த நிலை யில் ஆறின கஞ்சி பழங்கஞ்சி போன்றது தான் ஆனால் ஆறின கஞ்சியை சூடாக்குவது போன்று தான் பாரதிய ஜனதாவின் செயற் பாடு அமைந்திருப்பதாகவும் விமர்சனம் எழாமல் இல்லை.

இதே போன்றுதான் பாகிஸ் தானுடன் சமாதானத்தை ஏற்படுத்து வதாக முன்பு ஆட்சியில் இருந்த பாரதிய ஜனதா கட்சி கூறிக்கொண் டது. ஆனால் இன்று தமது கையி லிருந்து ஆட்சி பறி போய்விட்டது. ஆனால் காங்கிரஸ் அரசு பாகிஸ் தானுடன் சமாதானம் என்பதை ஏனோ எதிர்க்கட்சி ஆகிவிட்டதாலா பாரதிய ஜனதா விரும்ப வில்லை... என்று தான் வினா தோன்றுகின் றது.

அத்துடன் காங்கிரஸ் ஆட்சிப் பீடமேறியது முதல் பாரதியஜனதா பாடும் பல்லவி ஊழல் செய்த வர்கள் மத்தியரசில் அங்கம் வகிக் கின்றார்கள். அவர்கள் பதவி விலக் கப்படவேண்டும் என்பதுதான் அதற்

இதேவேளை பாரதிய ஜனதா கட்சியின் பாராளுமன்றத் தடையை மீறி ஆர்ப்பாட்டம், ஊர்வலம் செய்ததாக மத்தியரசு பாரதிய ஜனதாத் தலைவர்களைக் கைது செய்தமையும் இருக்கின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன் னாள் துணைப்பிரதமர், அத்வானி உள்ளிட்டவர்களும் அடக்கம் இவர் கள் விடுதலை செய்யப்பட்டது வேறு ஆனால் முன்னாள் பிரதமர் துணைப் பிரதமராக இருந்தவர்கள் இன்று அற்பத்தனமான விடயங்களுக் காகத் தம்மைத்தாமே தாழ்த்திவிட் னரே... எனும் அங்கலாய்ப்பும் நில வாமல் இல்லை. ஏனெனில் மத்தி யரசு ஏற்கனவே பாரதிய ஜனதா வின் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என்ப வற்றிற்குத் தடை விதித்திருந்தது. மீறினால் கைது செய்யும் நிலை உருவாகும் என்றும் அறிவித்திருந்தது

மறுபுறம் பாரதிய ஜனதாவோ எதையும் பொருட்படுத்தாது அரசி யலில் கைது செய்யப்படுவது கௌரவம் என்பது போன்றுதான் நடந்து கொண்டிருப்பதாக நம்பத் தோன்றுகின்றது.

அதுமட்டுமன்றி, ஏற்கனவே காங்கிரஸ் அரசு பதவியேற்றது முதல் பாரதிய ஜனதா கட்சி பாராளு மன்றக் கூட்டத் தொடரை சுமுக மாக நடத்த விட்டதில்லை எனும் குற்றச்சாட்டு அக்கட்சி மீது இன்றும் இருக்கின்றது.

இந்த நிலையில் முன்னாள் பிரதமர், துணைப் பிரதமர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டபோது, கைது செய்தது தவறு என்று மீண்டும் பாராளுமன்றத்தை முடக்கவும் தொடங்கிவிடும் எனும் ஆருடமும் இல்லாமலில்லை.

ஏற்கனவே பாராளுமன்றக் குளிர் காலம் முதல் கூட்டத்தொட ரையே எதிர்க்கட்சிகள் புறக்கணித் திருக்கின்றன. அத்துடன் 17 நாட்கள் நடைபெறவுள்ள கூட்டத்தொடரை புறக்கணிக்கப் போவது போன்று தான் எதிர்க்கட்சிகள் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே சங்கராச்சாரியாரின் கைது விவகாரம் பாராளுமன் றத்தை ஒரு கலக்குக் கலக்கும் போல தான் நிலைமைகள் காணப்படு கின்றன. இதேவேளை உண்மை மாறாக தமது கூட்டணியான அதி.மு.க. தான் தமிழகத்தில் ஆட்சியில் இருக் கிறது எனவே சங் ராச்சாரியாரின் கைது விவகாரம் உண்மையில் கூட்டணியின் பிரகாரம் பாரதிய ஜனதாக் கட்சிக்கு தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால் நடந்திருப்பதைப் பார்க்கும் போது தமிழக அரசு பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வகிக்கின் றதா எனும் பெரிய சந்தேகத்தை தான் உருவாக்கியிருக்கின்றது.

தமிழக அரசின் கட்டளை காதும் காதும் வைத்தது போன்று தான் சங்கராச்சாரியார் கைதில் நடந்திருக்கின்றது. அது மட்டுமன்றி தமிழக பொலிஸார் சங்கராச் சாரியார் மீது 65 பிரச்சினைகளை குற்றச்சாட்டுக்களாகச் சுமத்தி வேறு இருக்கின்றது. அத்துடன் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவோ ஒரு படிமேலே போய் ஜெயேந் திரர் கைதுக்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாக அறை கூவல் விடுத்திருக்கின்றார்.

இவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது அ.தி.மு.க, பாரதிய ஜனதா கூட்டணிக் கிடையே உட்கட்சிப் பூசல் பலத்த இடை வெளியை உருவாக்கிவிட்டது என்றும், அதன் உச்சக்கட்ட நிலை யே சங்கராச்சாரியாரின் கைது என்றும் தான் நம்ப வேண்டிய சூழல் அமைந்திருக்கின்றது.

இதனை மறுபுறமாக ஆராய்ந் தால் தமிழக அரசு மத்தியரசை குளிர்விக்க விரும்புகின்றதோ... எனும் சந்தேகம் வலுக்கவும் தோன்றுகின்றது.

ஏனெனில் தி.மு.க.கூட்டணி தமிழக அரசுக்கு ஆப்பு வைப் பதில் தான் குறியாக செயற்பட்டு வருவதாக நம்பப்படுகின்றது. அவற்றின் வெளிப்பாடுகளே தமிழக ஆளுனர் மாற்றம், உச்ச நீதிமன்ற நீதிபதி மாற்றம் என்பனவாக கணிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் தமிழகத்தில் சட்டம் நீதி ஒழுங்காகப் பேணப் படுவதாக தமிழக அரசு காட்டிக் கொள்வதற்காகவே காவி தப்புச் செய்தால் கூட அதை தட்டிக் கேட் பது போன்று தமிழக அரசு தன்னை வெளிகாட்டிக் கொள்கிறது.

ஆனால் அப்போது மத்தியில் பாரதிய ஜனதா ஆட்சியிலிருந்தது என்பதே உண்மையான காரணம் எனலாம். சங்கராச்சாரியாருக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும் நெருக் கமான உறவுகள் நிலவியதாக இப்போதும் தகவல்கள் கசிந்த வண்ணமுள்ளன.

அது மட்டுமன்றி கடந்த மக்களவைத் தேர்தலில், வலிந்து சென்று காலில் விழாத குறையாக பாரதிய ஜனதா அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்து கொண்டது ஆனால் தமிழகத்தில் ஒரு தொகுதியைக் கூட தக்க வைத்துக் கொள்ள முடி யாத பலவீனமான நிலை ஏற்பட்ட தையடுத்து பாரதிய ஜனதா தலைவர்கள் அ.தி.மு.கவை படு கேவல மாக விமர்சித்தமை அனைவரும் அறிந்ததொன்று.

தமிழக முதலமைச்சர் பழிவாங் கும் போக்கில் செயற்படுபவர் என்றும் கிட்லர் போன்றவர் என்றும் அவரைக் குறித்து கருத்துக்கள் நிலவி வருகின்ற வேளை பாரதிய ஜனதாவை இம்சைக்குள்ளாக்கும் விதமாகச் சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டுள்ளாரா? என்ற நோக் கிலும் இது சிந்திக்கத்தக்கதே.

எது எப்படியோ தமிழக அரசின் அதிரடி நடவடிக்கையினால் பாரதிய ஜனதா அல்லாடிப் போய் விட்டதென்னமோ உண்மைதான். இல்லையேல் பனை மரத்தில் தேள் கொட்ட தென்னை மரத்தில் நெறிகட்டுவது போன்ற கதையாக தமிழக அரசு சங்கராச்சாரியாரைக் கைது செய்ய மத்தியரசிடம் போய் மல்லுக்கட்டுவானேன்.

இவை எல்லாவற்றையும் விட மிகப் பெரிய உண்மை இதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அரசியலுக் குள் புகுந்திருந்த மதம் இன்று ஆழமாக கால்பதித்துவிட்டது என்பதே ஆகும் .அதுமட்டுமன்றி மதத்தின் பெயரால் சட்ட நடவடிக் கைகளுக்கு நாட்டை ஆண்ட கட்சி கள் தடைபோடமுயல்வது வருந் தத்தக்க தொன்று என்றால் அது மிகையில்லை.

# அவுஸ்திரேலிய அதிகாரிகளின் உறுதி மொழியால் இலங்கையர்களின் உண்ணாவிரதம் நிறுத்தம்

**தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரி தெற்கு அவுஸ்திரேலிய அகதிகள் தடுப்பு முகாமொன்றில் உண்ணாவிரதமிருந்த இலங்கையர்கள் 11 பேரும் அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் கொடுத்த உறுதிமொழியை அடுத்து தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்**

தமக்கு அகதி அந்தஸ்து தரக் கோரியும் தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரியும் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தெற்கு அவுஸ்திரேலியாவிலுள்ள பக்ஸ்டர் அகதிகள் தடுப்பு முகாமில் இரண்டு இலங்கையர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். கடந்த வாரம் மேலும் 9 இலங்கையர்கள் அவர்களது போராட்டத்தில் இணைந்து கொண்டனர். போராட்டத்தால் உண்ணாவிரதிகளின் உடல்நிலை மோசமடைந்ததால் முதலில் நால்வரும் பின்னர் மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். நெருக்கடி நிலையை உணர்ந்த அவுஸ்திரேலிய குடிவரவு அதிகாரிகள் பல்தேசிய சுதேச விவகாரத்துறை அதிகாரிகளை அழைத்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக அகதிகள் விவகாரத்துறைப் பேச்சாளர் மிரா றொபிள்ஸ்கி கூறுகையில்; "இலங்கையில் தற்போது நிலைமை பழையபடி மோசமாக ஆரம்பித்திருப்பதால் முகாமிலுள்ள இலங்கையர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நேர்காணல் செய்து அவர்கள் தொடர்பான மீள்தயார் செய்யப்பட்ட அறிக்கையை குடிவரவு அமைச்சருக்கு அனுப்புவது என்று பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது. "உண்ணாவிரதிகளின் நியாயமான கோரிக்கைக்கு இணங்கி அவர்களுக்குச் சாதகமான நடவடிக்கையையே அரசு மேற்கொண்டுள்ளது'' என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில் - "உண்ணாவிரதிகள் சிலருக்கு நெஞ்சுவலி, வயிற்றுவலி போன்றவற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதாலும் சிலரது பேச்சாற்றல் மிகவும் மெதுவான மெல்லிய ஈனக்குரலில் காணப்பட்டதாலும் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்கள். "மிகுதி உண்ணாவிரதிகள் அரசின் உறுதிமொழியை அடுத்து தமது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தபோதும் உண்ணாவிரதத்தை முறிக்காமல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தமது சகாக்கள் திரும்பிவரும்வரை காத்திருக்கிறார்கள்'' என்று கூறினார்.

## விசேட பெருவிழா

(தென்மராட்சி)

110வருடங்கள் பழமையான புனிதநிக்ளஸ் ஆலயவிசேட பெருவிழா கடந்த 27ஆம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம் பமானது. வரும் 6ஆம் திகதி திரு நாள் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்படும். (28)



கிளிநொச்சி சேவியர்கடைச் சந்தியிலிருந்து ஜெயந்திநகர் செல்லும் வீதியில் பொருட்களுடன் வந்த பார ஊர்தி ஒன்று புதையுண்டு நிற்பதை படத்தில் காணலாம். இப்பார ஊர்தி நேற்று முன்தினம் இரவு வேளையிலிருந்து நேற்றுமாலை வரை அவ்விடத்தை விட்டு அகற்றப் படாததால் அவ்வீதி வழியான போக்குவரத்துக்கள் சிரமத்தின் மத்தியிலேயே மேற்கொள்ளப்பட்டதை அவதானிக்க முடிந்தது. (படம்-வரன்)

# தமிழீழ கல்வி மேம்பாட்டுப்பேரவையால் ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழகல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் 2005 ஆம் ஆண்டிற்கான கற்பித்தல் நடைமுறைகள், கற்பித்தல் தொழில் நுட்பம் என்பன அடங்கிய ஆசிரிய வாண்மை விருத்திச் செயலமர்வுகளை தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் நடத்தி வருகின்றனர். இது யாழ்.குடாநாட்டிலுள்ள கல்வி வலயங்கள் ரீதியாக நடத்தப் பட்டு வருகின்றன. இதன் மூலமாக ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயன்பெற்று வருகின்றனர். (33)

# படைமுகாம்களில் தங்கியுள்ள நாய்களை அழிக்கக் கோரல்

(தென்மராட்சி)

கைதடிப்பிரதேசத்தில் உள்ள சிறிலங்காப் படைமுகாம்களில் தங்கியுள்ள கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் படி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள சாலைகளில் பெருந்தொகையான நாய்கள் பகல்வேளைகளில் நடமாடி வருவதுடன் சாலைகளில் செல்வோரைக் கடிப்பதுடன், கூட்டமாய்சேர்ந்து பாதைகளில் பிரயாணம்செய்வோரை கடிக்கத் துரத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

இது குறித்து அச்சம் அடைந்துள்ள மக்கள், உடனடியாக இப்பிரதேசத்தில் திரியும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் படி கோரியுள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் படைமுகாம்களில் பதுங்கி வாழும் நாய்களை அழித்து மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் படி கோரியிருக்கின்றனர். (28)

## வலி. தெற்கு பிரதேசசபை மாகாண மட்டத்தில் முதலிடம்

"வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள 61 பிரதேசசபைகளுக்கிடையில் சபைகளில் 2003 ஆம் ஆண்டில் செயற்பாடுகள் முகாமைத்துவம் தொடர்பாக நடாத்தப்பட்ட போட்டியில் வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேசசபை யாழ். மாவட்ட மட்டத்திலும், வடக்கு கிழக்கு மாகாண மட்டத்திலும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது."

## சீர்கேட்டை நிறுத்துக!

(தென்மராட்சி)

யாழ்.வீதி சிராம்பியடி பகுதியில் தெரு விளக்குகள் இல்லாமையால், பல குற்றச் செயல்கள் நடந்து வருவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இப்பகுதியில் உள்ள தெருக்களில் இருட்டைப் பயன்படுத்தி பாலியல் ரீதியான துர்நடத்தைகள் இடம்பெற்று வருவதுடன் திருட்டுக்கள் மற்றும் வழிபறிச் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாக தெரியவருகிறது. இது குறித்து இப்பகுதி வாழ்மக்கள் தெருவிளக்குகளை அமைத்துத் தரும்படி இலங்கை மின்சார சபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கவனத்திற்கு கொண்டு சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (28)

# வட இலங்கை சங்கீத சபைத் தேர்வு விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

வட இலங்கை சங்கீத சபைத் தேர்வுகள் 2005 விண்ணப்ப முடிவுத் திகதி 15.12.2004 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

திருமுறைப் பண்ணிசை, வாய்ப்பாட்டு, வயலின் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், பரதம் கதகளி ஆகிய பாடங்களுடன் இவ்வாண்டு புதிதாக தவில், நாதஸ்வரம், ஹார்மோனியம் ஆகிய பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட தேர்வு தங்கள் நாடிகள் விண்ணப்பப்படிவங்களை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிமாவட்டத் தேர்வுநாடிகள் தமக்கு வேண்டிய விண்ணப்பப் படிவங்களை அவ்வப்பகுதி இணைப்பாளரிடம் பெற்று 15.12.2004 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம்.

# வீதியின் மோசமான நிலையால் பேருந்துச்சேவை இடைநிறுத்தம்

## -நெருக்கடியைப் போக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.காரைநகர் மேற்கு வீதியூடான வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துப் போக்குவரத்துச்சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

மேற்படி வீதி நீண்டகாலம் புனரமைக்கப்படாத நிலையில் மிக மோசமாகச் சேதமடைந்து போய் காணப்படுவதனால் இவ் வீதியூடான பேருந்துச் சேவை கடந்த ஒரு வாரகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் தம் பயணத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனினும், உரிய அதிகாரிகள் தக்கநடவடிக்கைகளை மேற்கொள்ளாது தாமதப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# குடாநாட்டில் சுகாதார சேவையினரால் எயிட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் யாழ். குடாநாட்டில் எயிட்ஸ் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கொடிய உயிர் கொல்லி நோயான எயிட்ஸ் பரம்பலிலிருந்து மக்களைப்பாதுகாப்பதை இலக்காகக் கொண்டே தமிழீழ சுகாதார சேவையினர் இவ்விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொண்டுவருகின்றனர் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய பகுதிகளில் குழுக்கள் குழுக்களாக கிராமங்கள் தோறும் சென்று எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்குகள், பிரச்சாரங்கள் என்பவற்றில் ஈடுபட்டுள்ளனர். (33)

# வடமாகாண கணக்காளர்களுக்கு விசேட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள 5மாவட்டங்களிலும் அரச திணைக்களங்களில் கடமையாற்றும் கணக்காளர்களுக்கான 2005 ஆம் ஆண்டின் வடிவமைக்கப்பட்ட கணக்காளர்களுக்கான விசேட திட்டத்தின் அறிமுகக்கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி யாழ்.அரசசெயலக மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. சிறிலங்கா திறைசேரியின் பணிப்பாளர்நாயகம் பி.எம்.பியஸ் பெர்னாண்டோ மற்றும் உதவிப் பணிப்பாளர் நாயகம் டீ.அல்விஸ் ஆகியோர் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ,வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கணக்காளர்கள் பங்கு கொள்ளவுள்ளனர். (33)

# மீன்பிடித்துறையில் நவீன தொழில்நுட்பம் இந்தோனேசியாவில் பயிற்சி நெறி

"கடல் மூல வளங்கள் மற்றும் மீன்பிடித்துறையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல்" தொடர்பாக இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள பயிற்சிப்பட்டறையொன்றில் கலந்து கொள்ள வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மூவர் பயணமாகவுள்ளனர். கடற்றொழில் மற்றும், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் தலைமையில் இன்று இலங்கையிலிருந்து புறப்படும். இக் குழுவினர் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பர். வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தைச் சேர்ந்த க.சூரியகுமாரன், கற்கோவளம் மீனவசங்கத்தைச் சேர்ந்த நா.பாக்கியநாதன் மற்றும் மணற்காடு மீனவ சங்கத்தைச் சேர்ந்த எல்.பி.மரியதாஸ் ஆகிய மூன்று பேருமே பயணிக்கும் குழுவில் உள்ளடங்கியுள்ள கடற்றொழிலாளர்கள் ஆவர். (27)

# வன்செயல்களுக்கு காரணமானோரை உடன் கைதுசெய்யப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர், திருநகர் பகுதியில் வாள் மற்றும் வன்செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் என்பவற்றை வைத்திருப்போரைக்கைது செய்து யாழ்.நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு மாவட்டநீதவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் குருநகர்- திருநகர் பகுதிகளைச் சேர்ந்த இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்றுவந்த குழுமோதல்களால் அப்பகுதியெங்கும் பரபரப்பு நிலவி வந்தது.

இவ்வாறு அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் விதமாகவே நீதவான் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை யாழ். குருநகர் பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை காரணமாக அங்கு பெருமளவிலான சிறிலங்கா படையினர் மற்றும் பொலிஸ் பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (33)

# சுவீடன் கோடீஸ்வரரின் சடலம் எரிந்து கருகிய நிலையில் மீட்பு

17 வருடகாலமாக சீனிமோதர-பிரதேசத்தில் வாழ்ந்து வந்த சுவீடன் நாட்டைச் சேர்ந்த 73 வயதுடைய கோடீஸ்வரர் தனது படுக்கை அறையில் முற்றாக எரிந்து கருகிய நிலையில் சடலமாக தங்காலை பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட் டுள்ளார்.

கடந்த வியாழனன்று இவரது சொந்த வீட்டில் இருந்து சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் வீட்டில் தொலைபேசிகள் செயல் இழந்து காணப்பட்டுள்ளதாகவும் பொலி சார் கூறியுள்ளனர்.

### -மொறட்டுவ பல்கலைக்கழகத்தில்-

# சுவரொட்டி ஒட்டுவது தொடர்பில் மாணவர்களிடையே மோதல்

மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் சுவரொட்டிகள் ஒட்டுவது தொடர்பாக மாணவர் குழுக்களுக் கிடையே மோதல் இடம் பெற்றுள்ளது.

கடந்த வியாழனன்று இந்த மோதல் சம்பவங்கள் இரு மாணவர் குழுக்களுக்கிடையே நடைபெற்றுள்ளது.

தேசியத் தொழில் நுட்ப டிப்ளோமா மாணவர்களுக்கும், பொறியியல்பீட மாணவர்களுக்கு மிடையே நடைபெற்ற இந்த மோதலைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்ததாக மொறட்டுவ பொலிசார் தெரிவித்துள்ளனர்.


## B(-)ve குருதி வகை சிறுநீரகம் அவசரம் தேவை

அராலி வடக்கு, யாழ்ப்பாணத்தை நிரந்தர முகவரியாகக் கொண்ட, தற்போது சுவிஸ்லாண்டில் வசித்து வரும் திரு. செல்லத்துரை சிவபாதம், வயது 52 என்பவருக்கு அவசர "சிறுநீரகமாற்று" சத்திர சிகிச்சை செய்வதற்கு B(-)ve சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

***சன்மானம் பேசித்தீர்மானிக்கப்படும்***

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

திருமதி.க.இராசரத்தினம்
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.
T.P-021-228 5810 (சி.10650)


## யாழ்ப்பாண மாநகரசபை

## யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கான அறிவுறுத்தல்

**இத்தால் சகலருமறிக!**

01. ஆஸ்பத்திரி வீதி, மின்சாரநிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, காங்கேசன்துறை வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய வீதிகளில், தங்கள் வர்த்தகக் கடைக்கதவுகளின் எல்லைக்கப்பால் மேலதிகமாக இட்டுள்ள தாழ்வாரங்களை உடனயாக அகற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். வீதிப்போக்கு வரத்திற்கு பெரும் இடையூறாகவுள்ள இவற்றை அகற்றுவதோடு, நடைபாதையை மறித்துள்ள உங்கள் பொருட்களை பார்வைக்கு வைப்பதையும் தடை செய்கின்றேன்.

டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் இவை நிறைவேற்றப்படாவிட்டால், அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எம்மால் எடுக்கப்படும் என்பதை வர்த்தகர்களுக்கு அறியத்தருகின்றேன்.

02. நடைபாதை வியாபாரிகளுக்கு:-
யாழ்ப்பாண நகரத்தில் மேற்குறித்த வீதிகளில் நடைபாதை வியாபாரம் செய்வதும் இத்தால் தடை செய்யப்படு கின்றது. இந்த அறிவித்தலை மீறி, நடைபாதை வியாபாரத்தினைத் தொடர்ந்து நடாத்தின், அவை மாநகர சபையால் அகற்றப்படும் நிலை உருவாகும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

[கலாநிதி,க.குணராசா]
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம். (5357)

**வவுனியா வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெடுங்கேணி**

## செத்தல் மிளகாய் பகிரங்க ஏல விற்பனை

மேற்படி எமது சங்கத்தில் இருப்பாக இருக்கும் நல்ல தரமான ஐயாயிரம் கிலோ செத்தல் மிளகாய் 11.12.2004 ஆம் திகதி பகல் 12.00 மணிக்குத் தலைமைப்பணிமனை மண்டபத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. செத்தல் மிளகாயைப் பார்வையிட விரும்புபவர்கள் காரியாலய நாட்களில் காரியாலய நேரத்தில் வந்து பார்வையிடலாம் ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் மீளளிக்கப்படும் வைப்பாக ரூ.5000/- மும் மீளளிக்கப்படாத வைப்பாக ரூ.500/=ம் செலுத்தியிருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் அன்றையதினமே முழுப்பணமும் ரொக்கமாகச் செலுத்திச் செத்தல் மிளகாயைப் பொறுப்பேற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஏல விற்பனைக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

வி.குகராசா
தலைவர்.

(சி.10848)

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டதாகவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் "தலைவர், வவுனியா வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ, நேரடியாகவோ 20.12.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் கடமைக்குச் சேரும் போதே ரொக்கப்பிணை ரூபா பத்தாயிரமும், ஆதனப்பிணை ரூபா. பத்தாயிரமும் செலுத்துதல் வேண்டும்.

01. பதவி: கணக்காளர் 104/09
சம்பளத்திட்டம்:
6250.00 -10 X 110 -10 X 120 = 9010/-
75000.00 -10 X 1320 -10 X 1440 =102600/-

வயதெல்லை: 18-45 வருடங்கள் சேவையில் உள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

கல்வித்தகைமை:

அ. கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப்பணியாளர் 11 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு இலிகிதர் பதவியில் ஆகக்குறைந்தது. ஆறுவருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப்பதிவாளர் இறுதிப்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு/ கணக்காய்வுத்துறைப் பதவியொன்றில் மேற்பார்வைத்தரத்தில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவமும், அல்லது ஐக்கிய இராட்சியத்தால் நடாத்தப்படும் கணக்குப்பதிவாளர் இடை நிலைப்பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு/கணக்காய்வுத்துறைப் பதவி ஒன்றில் மேற்பார்வைத்தரத்தில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்,

அல்லது

இ. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம்/க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு/ கணக்காய்வுத்துறையில் மேற்பார்வைத்தரத்தில் 4வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

02.கிளைமுகாமையாளர்: 165/ 88-13
ஆண்கள் மட்டும்

சம்பளம்:
5250.00 -75.00 X 10 - 80 X 10 = 6800/-
63000.00 - 900.00 X 10 - 960.00 X 10=81600

வயதெல்லை: 18 - 45 வரை
கல்வித்தகைமை: க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில்

1. தமிழ் பாஷை, கணிதம் 1/கணிதம் 2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுட்பட மூன்றுபாடங்களில் திறமைச்சித்தியுடன் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. தமிழ்,கணிதம்/வர்த்தகமும் கணக்கியலும் க.பொ.த உயர் தரத்தில் சித்தி பெற்றிருப்பின் க.பொ.த.சாதாரண தரத்தில் தமிழ், கணிதம்1 / கணிதம் 2/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் ஆகிய இவற்றில் ஒன்றில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதிலிருந்து விலக்களிக் கப்படும்.

தலைவர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி

(சி.10847) திகதி-02.12.2004

# மத்திய பிரதேச முன்னாள் முதலமைச்சர்கள் பா.ஜ.க தலைவர்கள் முரண்பாடு தொடர்கிறது!

## – பிரச்சினைகளால் உமாபாரதி திண்டாட்டம்

(புதுடில்லி)


இந்தியாவின் மத்திய பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் உமா பாரதி அடுத்தடுத்துப் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவிக் கிறார்.

கொலைக் குற்றச்சாட்டுக்காக முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய அவர் ஹுப்ளி சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையான பின்பு ரத யாத்திரை சென்றார். இதை விரும்பாத பாரதிய ஜனதா மூத்த தலைவர்கள் அவரை வெளிப்படையாக விமர்சித்தனர். இந்த நிலையில் டில்லியில் நடந்த பாரதிய ஜனதா நிர்வாகிகள் கூட்டத் தில் அத்வானி முன்னிலையில் மூத்த தலைவர்களை உமாபாரதி கடுமையாக விமர்சித்தார். இதனால் அவர் பாதியிலேயே கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்தார். உமாபாரதியின் இந்த செயலைக் கண்டித்து அவருக்கு கட்சி மேலிடம் விளக்க கடிதம் அனுப்பி பதவி நீக்கம் செய்தது. இந்த விவகாரத்தில் உமாபாரதி மூத்த தலைவர்கள் வாஜ்பாய். அத்வானி ஆகியோரைச் சந்தித்து பேசிய பின்பு சமரசம் ஏற்பட்டது. அவர் மீதான பதவி நீக்கமும் இரத்துச் செய்யக் கட்சி மேலிடம் முடிவு செய்துள்ளது.

இந்தப் பிரச்சினை முடிவுக்கு வரும் நிலையில் உமாபாரதி அத்வானிக்கு எழுதியதாகக் கடிதம் ஒன்று டில்லியில் வெளியானது. அதில் பாரதிய ஜனதாத் தலைவர்கள் வெங்கையா நாயுடு, அருண் ஜெட்லி, பிரமோத்மகாஜன், சுஷ்மா சுவராஜ், எம்.ஏ. நக்வி ஆகியோர் மீது பரபரப்பு குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு இருந்தது.

இந்தக் கடிதம் கட்சியில் புயலைக் கிளப்பியதைத் தொடர்ந்து உமாபாரதி மீண்டும் அத்வானியை சந்தித்துப் பேசினார். அதன் பிறகு உமாபாரதி நிருபர்களிடம் ஆவேசமாகப் பேசினார். அவர் கூறியதாவது ; பாரதிய ஜனதா தலைவர்கள் மீது புகார் கூறி நான் அத்வானிக்கு கடிதம் எழுதியதாக சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. நான் அத்வா னிக்கு அது போன்ற கடிதம் எது வும் எழுதவில்லை. என் பெயரில் போலிக் கடிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.

போலிக் கடிதம் எழுதியவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பேன். இது தொடர்பாக சட்டத்தரணிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றேன் இவ்வாறு அவர் கூறினார். இதற்கிடையே பாரதிய ஜனதா நிர்வாகிகள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்ததற்கு வருத்தம் தெரிவித்து உமாபாரதி மன்னிப்புக் கடிதம் கொடுத்துள்ளார்.



அரியூரில் 8கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்கும் 5 வயது சிறுவன் ராகுல் கணேஷின் தொடர் பல்டி சாதனை நிகழ்ச்சி தொடங்கியது. அதை வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் தமிழரசி தொடங்கி வைத்தார். அருகில் ரோட்டரி சங்கத் தலைவர்கள் கே.எம்.ஷம்மிகுமார்.

# இந்தியா - பாகிஸ்தான் ரயில் சேவை 40 ஆண்டுகளின் பின் ஆரம்பிக்க முடிவு

இந்தியாவும், பாகிஸ்தானும் சுமார் 40 ஆண்டுகாலமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இரண்டாவது ரயில் தொடர்பை மீண்டும் ஏற்படுத்த இணங்கியுள்ளன.

இஸ்லாமாபாத்தில் இரண்டு நாட்கள் இடம் பெற்ற பேச்சுக்களின் பின்னர் இந்திய பாகிஸ்தான் ரயில்வே அதிகாரிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில், கோப்ராவிற்கும், முனாபாவிற்கும் இடையில் மீண்டும் ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதோடு ரயில் பாதையை அமைப்பது மற்றும் சீரான சேவைக்குத் தேவையான உட்கட்டமைப்பை ஏற்படுத்துவது குறித்தும் இரு தரப்பும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

இந்தியாவின் முனாபாவிலிருந்து தெற்கு பாகிஸ்தான் பட்டினமான கோப்ராவிற்கான ரயில் சேவை 1965 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடைநிறுத்தப்பட்டது. இதற்குக் காரணம் காஷ்மீர் தொடர்பான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டமையே ஆகும்.

சனவரி மாதத்தில் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான மேற்படி ரயில் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.


# பயணிகள் போக்குவரவு ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

2005 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்

| வட்டகை | நாள் | தொடங்கும் நேரம் | முடிவு நேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| மல்லாவி | 15.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| கிளிநொச்சி | 18.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 19.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| தாளையடி | 20.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 21.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| மல்லாவி | பேருந்து நிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம் |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு

(சி.10951)

# வாடகை ஊர்தி உரிமையாளர் கவனத்திற்கு!

2005 ஆம் ஆண்டு பயணியர் போக்குவரவில் ஈடுபடும் ஊர்தி வழி ஒப்புதல் பெறுவதற்கான மீளாய்வு கீழ்வரும் கால ஒழுங்கில் நடைபெறும்

| வட்டகை | நாள் | தொடங்கும் நேரம் | முடிவு நேரம் |
|---|---|---|---|
| புதுக்குடியிருப்பு | 15.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 16.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 17.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| மல்லாவி | 15.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 16.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| வெள்ளாங்குளம் | 17.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 18.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| கிளிநொச்சி | 18.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| | 19.12.2004 | காலை 09.30 | மாலை 03.30 |
| தாளையடி | 20.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |
| | 21.12.2004 | காலை 10.00 | மாலை 04.00 |

| வட்டகை | இடம் |
|---|---|
| புதுக்குடியிருப்பு | மரமடுவத்தின் அருகில் உள்ள வளாகம் |
| மல்லாவி | பேருந்து நிலையம் |
| வெள்ளாங்குளம் | பேருந்து நிலையம் |
| கிளிநொச்சி | பேருந்து நிலையம் |
| தாளையடி | பளை பேருந்து நிலையம் |

முகாமையாளர்,
பயணியர் போக்குவரவு ஊர்தி
வழியனுமதிப் பணியகம்,
புதுக்குடியிருப்பு

(சி.10951)

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்திய பெண்கள் அணி அறிவிப்பு

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடருக்கான இந்தியப் பெண்கள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா வரும் அவுஸ்திரேலிய அணி 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.முதல் போட்டி வரும் 11 இல் மைசூரில் நடக்கிறது.

இத்தொடருக்கான இந்திய அணியில் மோனிகாசும்ரா,வர்ஷா ராபல் ஆகியஇரு புதுமுகங்களுக்குவாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தலைவராக மமதா மேபனும் பயிற்சியாளராக முன்னாள் தலைவர் சுதா ஷாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அணிவிபரம்:

மமதா மேபன்(தலைவர்),மிதாலி ராஜ் (துணைத்தலைவர்), அஞ்சு ஜெயின், அஞ்சும் சோப்ரா, ஜெயா சர்மா, ஹேமலதா கலா,ஜூலான் கோஸ்வாமி, அமிதா சர்மா, அருந்ததி கிர்கிரே, வர்ஷா ராபல், தீபா குல்கர்ணி, நீத்துடேவிட், நூஷின் அல்-கதீர்,மோனிகா சும்ரா.




# சிறந்த களத்தடுப்பாளர்களில் கயூப், யுவராஜ் சிறந்தவர்கள்




இந்திய அணியில் கயூப், யுவராஜ் ஆகிய இருவரும் சிறந்த களத்தடுப்பாளர்களாக ஜொலிப்பதாக உலகின் தலைசிறந்த களத் தடுப்பாளராக விளங்கிய தென்னாபிரிக்காவின் ஜோன்டி ரோட்ஸ் தெரிவித்துள்ளார்.


இந்தியா சென்றுள்ள ரோட்ஸ் அங்கு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு தனக்குப் பிடித்த களத் தடுப்பாளர்கள் பற்றித் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவர்களை விட ரிக்கிபொண்டிங், மார்க்டெய்லர், மார்க்வோ (அவுஸ்திரேலியா) டிவில்லிபாஸ், கிப்ஸ், ஜஸ்டின் ஆன்டாஸ் (தென்னாபிரிக்கா) உபுல்சந்தன, (சிறிலங்கா) ஆகியோரும் தனக்குப் பிடித்த களத்தடுப்பாளர்கள் என்றார்.



துருக்கி,இஸ்தான்புல் நகரில் உய்பாலீக் கால்பந்து போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பெசிக்டாஸ் கோல்கீப்பர்ரமஜான் குர்சுன் லுவை( வலது) ஏமாற்றி கோல் அடிக்கிறார் ஸ்டன்டார்ட் லீகே அணியின் பன்கோரா( இடமிருந்து 2 ஆவது) இந்தப் போட்டி 1-1என்ற கோல்கணக்கில் சமன் செய்தது.

# டெஸ்ட் கிரிக்கெட் தரப்பட்டியல் ராவிட், ஹார்மிசன் முதலிடத்தில்





டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ராவிட் முதல் இடத்தைப் பெற்றுளார்.

பிரபல பிரைஸ்வாட்டர் ஹவுஸ்கூப்பர்ஸ் நிறுவனம் டெஸ்ட் வீரர்களுக்கான தர வரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில், இந்தியாவின் ராவிட் 878 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பெறுகிறார். சேவாக் 856 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடிக்கிறார். தென்னாபிரிக்காவின் கலிஸ், மேற்கிந்தியதீவின் லாறா ஆகியோர் தலா 845 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

இப்பட்டியலில் அவுஸ்திரேலிய வீரர்களின் ஆதிக்கம்தான் அதிகம் காணப்படுகிறது. முதல் 30 வீரர்களில் ஹைடன் (5), பொண்டிங் (6), டேமியன் மார்ட்டின் (8), கில்கிறிஸ்ட் (15), லாங்கர் (19), லீமன் (27), மைக்கேல் கிளார்க் (28) என ஏழு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்தின் ஹார்மிசன் முதல் இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளாக முதல் மூன்று இடத்துக்குள் இருந்து வந்த தென்னாபிரிக்காவின் போலக் முதல் முறையாக பின் தங்குகிறார். இவர் 818 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்தியாவின் கும்ளே, ஹர்பஜன்சிங் முறையே 7, 9ஆவது இடத்தில் உள்ளனர்.


துடுப்பாட்டம்:-

ராவிட் (இந்தியா) 878, ஷேவாக (இந்தியா) 856, லாறா (மேற்கிந்தியத்தீவு) 845, கலிஸ் (தென்னாபிரிக்கா) 845, ஹைடன் (அவுஸ்திரேலியா) 817, பொண்டிங் (அவுஸ்திரேலியா) 787, இன்சமாம் உல்ஹக் (பாகிஸ்தான்) 785, மார்ட்டின் (அவுஸ்திரேலியா) 765, சங்கக்கார (சிறிலங்கா) 752, கிப்ஸ் (தென்னா பிரிக்கா) 749.

பந்து வீச்சு:-

ஹார்மிசன் (இங்கிலாந்து) 875, முரளிதரன் (சிறிலங்கா) 850, மெக்ராத் (அவுஸ்திரேலியா) 835, அக்தர் (பாகிஸ்தான்) 828, போலக் (தென்னாபிரிக்கா) 818, கிளெஸ்பி (அவுஸ்திரேலியா) 807, கும்ளே (இந்தியா) 757, வோர்ன் (அவுஸ்திரேலியா) 750, ஹர்பஜன்சிங் (இந்தியா) 719, நிடினி (தென்னாபிரிக்கா) 689.

# போதை மருந்து உட்கொண்டார் மரியன் ஜோன்ஸ் மீது விசாரணை





அமெரிக்காவின் பிரபல ஓட்ட வீராங்கனை மரியன் ஜோன்ஸ் மீது போதைப்பொருள் பாவனை குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடைபெறவிருப்பதாக தெரிய வருகின்றது. இந்தக் குற்றச்சாட்டை அந்நாட்டு ஆய்வு கூட உதவியாளர் விக்டர் சொன்ரே கூறியுள்ளார்.

எனினும் மரியன் ஜோன்ஸ் அதனை நிராகரித்ததுடன் தான் எந்த விசாரணைக்கும் தயாராக இருப்பதாக கூறுகிறார். அத்துடன் அவரின் சட்டத்தரணியான றிச்சட் நிக்களஸ் ஜோன்ஸ் எந்தச் சந்தர்ப் பத்திலும் போதை பொருள் பாவித்து விளையாட்டுக்களில் பங்கு கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக சர்வதேச மெய்வல்லுநர் சங்கம் விசாரணை நடத்துவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இது தொடர்பாக இறுதித் தீர்மானத்தை அமெரிக்க அதிகாரிகளே எடுப்பர் என கூறப்படுகின்றது.

எனினும் குற்றம் சாட்டிய கொன்ரே பல இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர் என்பதால் அவரிடமும் விசாரணைகள் இடம்பெறவிருப்பதாக கூறப்படுகின்றது. மரியன் ஜோன்ஸ் கடந்த வருடம் இக் குற்றச்சாட்டுக்குள்ளாகியிருந்த போதும் அது நிரூபிக்கப்படாததால் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மெக்ராத்திற்கு ஓய்வு பிரெட்லீக்கு வாய்ப்பு




நியூசிலாந்துக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் முதலாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணியில் வேகப்பந்து விச்சாளர் பிரெட்லீ இணைக் கப்பட்டள்ளார். சிறப்பாக ஆடிவரும் மெக்ராத்துக்கு ஓய்வு வழங்கப்பட்டே பிரட்லீ இணைக்கப்பட்டுள்ளார்.

மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி மெல்பேர்னில் இன்று ஆரம்பமாகின்றது

# ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே குறிக்கோள்- அமீர் ஹான்

ஒலிம்பிக் போட்டிகளுக்குப் பின்னர் மீண்டும் போட்டிகளில் பங்கேற்று மைக்கல் இவானை 35-13 என்ற கணக்கில் வென்றமை



தனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருவதாக பிரிட்டன் குத்துச் சண்டை வீரர் அமிர்ஹான்தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிக்காக நீண்ட காலப் பயிற்சியை மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கும் அவர், சில நாட்களாகவே பயிற்சியில் ஈடுபட்டதாக கூறுகிறார்.

மைக்கல் இவானும் சாதாரண வீரரல்ல 100 வீதம் அவர் பலசாலி என்றதுடன் நன்றாகப் போராடினார் என்றார். இவான் மீண்டும் அமெச்சூர் கழகத்துடன் இணைந்து பயிற்சிகளில் ஈடுபடவுள்ளார். தனது குறிக்கோள் 2008ஆம் ஆண்டின் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே என்றார்.




அமெரிக்காவில் நடைபெற்ற ஆண்களுக்கான ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்ற எர்பன் வென்னமார்ஸ், மூன்றாம் இடம் வென்ற கேசே பிற்ஸ்ரண்டால்ப் தமது பதக்கங்களைக் கடித்து மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

# 3 ஆவது போட்டியிலும் சிம்பாப்வேக்கு தோல்வி

## தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து அணி



சிம்பாப்வேக்குச் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் சிம்பாப்வே அணிக்கும் இடையில் நடைபெற்றுவரும் ஒரு நாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியிலும் இங்கிலாந்து அணி சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளது.

இதன் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3-0 என்ற நிலையில் இங்கிலாந்து கைப்பற்றிக் கொண்டது.


புலவாயோவில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் மிக்சிக்கனேரி 73, டெய்லர் 25, இப்ரகிம் 65, மசகட்சா 21, தைபு 24 ஓட்டங்களை முறையே பெற்றனர். ஜோன்ஸ் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

239 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து 43.1 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சோலங்கி 14 நான்கு ஓட்டம், இரண்டு ஆறு ஓட்டம் அடங்கலாக சதம் அடித்தார். பெல் 53 ஓட்டங்களைப் பெற்றார். ஆட்டமிழக்காது வோகன் 54, ஸ்ரோஸ் 22 ஓட்டங்களைப் பெற்றனர். வீழ்த்தப்பட்ட இரண்டு விக்கெட்டுக்களையும் மக்சிக்கனேரி கைப்பற்றினார்.

## சிந்தனைக்கு



தமிழீழ சுதந்திரப் போர் இன்று, ஆசியாக் கண்டத்தில் முதன்மையான விடுதலைப் போராட்டமாக சர்வதேசப் புகழை அடைந்திருக்கின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## வரலாற்றிலிருந்து நீக்க முடியுமா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜூம்,ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும் பண்டாரநாயக்க குடும்பத்தினர் பற்றி அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அதேசமயம், அவை பாராளுமன்றப் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்டும் உள்ளது.

ரவிராஜூம், மகேஸ்வரனும் பாராளுமன்றப் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கும் அளவிற்கு எதைக்கூறிவிட்டார்கள்? அந்தளவிற்கு அவர்கள் யாருக்கு அன்றி எதற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டார்கள்?

அண்மையில் பாராளுமன்றத்தில் பேசிய ரவிராஜ் எம்.பி, "பண்டாரநாயக்க பரம்பரையை அரசியலில் இருந்து வெளியேற்றினால் தான் இந்த நாடு உருப்படும்" எனத் தெரிவித்த கருத்தே எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு அடிப்படையாகும்.

இவ்வுரை குறித்து தன்னிலை விளக்கம் ஒன்றை ஆற்றிய பாராளுமன்ற உறுப்பினரும் பண்டாரநாயக்க குடும்ப வாரிசுகளில் ஒருவருமான அனுரா பண்டாரநாயக்க, ரவிராஜூற்கு சரித்திரம் தெரியாது எனவும், அரசியல் அறிவு இல்லாதவர் எனவும் சாடிய போது, ஐ.தே. க. பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கும், அனுரா பண்டாரநாயக்கவிற்கும் இடையில் கடும் வாக்குவாதம் மூண்டது.

இவ்வாக்குவாதத்தின் போது " பண்டாரநாயக்க குடும்பம்தான் இந்நாட்டைக் குட்டிச்சுவராக்கியது. அரசியலில் இனவாதத்தைத் துண்டிவிட்டு மக்கள் மத்தியில் அமைதியைச் சீர்குலைத்தது" என மகேஸ்வரன் சாடினார். இந்த வகையில் ரவிராஜூம், மகேஸ்வரனும்கூறியவையே சர்ச்சைக்கு காரணமாகவும், பாராளுமன்றப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்டவையாகவும் இருந்தன.

ஆனால், ரவிராஜ், மகேஸ்வரன் ஆகியோர் கூறியவற்றைப் பாராளுமன்றப் பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்குவதற்கு ஆளும்கட்சி போட்ட கூச்சலும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சபாநாயகரும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், பண்டாரநாயக்க குடும்பம் நாட்டைக் குட்டிச் சுவராக்கியதையும் நாட்டில் அமைதி நிலவாது போனமைக்கும் காரணமானதை இவர்களினால் இலங்கையின் வரலாற்றுப் புத்தகத்தில் இருந்து நீக்கமுடியுமா?

அரசியல் அதிகாரத்தைத் பிடித்துக்கொள்வதற்காக பதவிக்கு வந்த இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் தனிச்சிங்கள மொழி மசோதாவைக் கொண்டு வருவேன் என எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க வாக்குறுதி அளித்து தேர்தலில் வெற்றி பெறவில்லையா? அன்றி பதவிக்கு வந்த பின்னரும் தனி சிங்களமொழி மசோதா கொண்டு வரப்பட்டால் நாடு பிளவுறும் என எச்சரிக்கப்பட்டபோதும் அதனையும் மீறி அந்த மசோதாவை நிறை வேற்றவில்லையா?

அதன் பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்க தனது பதவிக்காலத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்த முதலாவது குடியரசு அரசியல் யாப்பில், சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பாக இருந்த சரத்துக்களை நீக்கவில்லையா? அன்றி தரப்படுத்தல் மூலம் சிறுபான்மை இனத்தவர்களுக்குப் பல்கலைக்கழகக்கல்விக்கு முட்டுக்கட்டைகள் போடவில்லையா?

இதன் பின்னர் 1994 இல் நாட்டிற்கு சமாதானத்தைப் பெற்றுக் கொடுக்கப் போவதாகக் கூறி பதவிக்கு வந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கையின் அண்மைய வரலாற்றிலேயே மிக மோசமான யுத்தத்தை சிறுபான்மைத் தமிழ்மக்களுக்கு எதிராக நடத்தவில்லையா? இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் உள்நாட்டிற்குள்ளும், வெளிநாட்டிலுமாக இடம்பெயர்வதற்குக் காரணமாக இருக்கவில்லையா?

இவை பண்டாரநாயக்க பரம்பரை நாட்டிற்குச் செய்த அழிவுகளா? அன்றிச் சேவைகளா? பண்டாரநாயக்க குடும்ப வாரிசுகளுக்கும், சிங்களப் பேரினவாத சக்திகளுக்கும், ஏன் சிறிலங்கா பாராளுமன்றத்திலுள்ள சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவை சில வேளை சேவைகளாகவும், நாட்டிற்கு ஆற்றிய அரும் பணியாகவும் இருக்கலாம்.

ஆனால், இலங்கை இன்று சந்தித்து நிற்கும் அழிவுகளுக்கும், நெருக்கடிகளுக்கும், தீர்க்க முடியாத சிக்கல்களுக்கும் இவர்களின் இந்நடவடிக்கைகள் காரணமென்பதை இலங்கையின் வரலாற்றைச் சித்தசுவாதீனத்துடன் எழுதும் எவருமே பதிவு செய்யாமல் விடப்போவதில்லை. ஆகையினால், இலங்கையின் வரலாற்றை எதிர்காலத்தில் படிக்கப் போகின்ற வாரிசுகள் நிச்சயமாகப் பண்டாரநாயக்க- பரம்பரையால் நாட்டிற்கு ஏற்பட்ட அழிவைச் சரியாகவே புரிந்துகொள்வர். அனுரா பண்டார நாயக்கவின் குடும்பத்தி னர் சாதனைகள் குறித்த பேச்சினாலோ பாராளுமன்றப் பதிவுப் புத்தகத்தில் இருந்து ரவிராஜ் மகேஸ்வரன் பேச்சுக்கள் நீக்கப் படுவதினாலோ பண்டாரநாயக்க பரம்பரையால் இலங்கைக்கு விளைந்தகேடு வரலாற்றிலிருந்து மறைந்து போய்விடமாட்டாது.

# சிறில. நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளே இலஞ்ச ஊழல்கள் அதிகரிக்கக் காரணம்

### ரான்ஸ் பரன்சி இன்ரர் நசனல் தெரிவிப்பு

நீதித்துறையில் காணப்படும் குறைபாடுகளே இலஞ்ச ஊழல்கள் நாட்டில் அதிகரிப்பதற்கான காரணம் என ரான்ஸ பரன்சி இன்ரர்நசனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஊழல்களை தடுக்க உரிய முனைப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும். இந்த நிலையில் எதிர்வரும் வியாழக்கிழமை அன்று ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல்களுக்கு எதிரான தினம் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு பொதுமக்கள் தெளிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக ரான்ஸ் பரன்சி இன்ரநசனல் நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் கே. ஏ வெலியமுன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஊழல்களை கட்டுப்படுத்தும் முகமாக அமைக்கப்படுகின்ற அமைப்புக்கள் யாவும் நிச்சயமற்றவையாகவே காணப்படுகின்றன. குறிப்பாக ஊழல்களை தடுக்கும் ஆணைக்குழுவின் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் மூவருமே அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறியவர்களாவார். இந்த நிலையில் அவர்களால் எவ்வாறு அரசாங்க திணைக்களங்களில் இடம்பெறும் ஊழல்களை தடுக்க முடியும். இலங்கையும் ஊழல்களை தடுக் கும் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச இணைக்கப்பாட்டில் கையெழுத்திட்டுள்ளது. எனவே இலங்கையிலும் ஊழல்களை தடுக்கும் உரிய முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என் றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# நீதியரசர் கொலையின் பின்னணியில் பிரதி அமைச்சர் ஒருவர் செயற்பட்டார்

### ஐ.தே.க.பா.உ திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

மேல் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவின் கொலைக்குப் பிரதியமைச்சர் ஒருவர் பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளார் எனப் பரவலாக வதந்திகள் கிளம்பி உள்ளன. ஆகவே அரசாங்கம் இவரின் பெயரை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டியில் நடந்த கூட்டத்தில் தெரிவித்துள்ளார். தற்பொழுது இவரின் கொலை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கும் போதைவஸ்து கடத்தல்க் காரருக்கும், பிரதி அமைச்சருக்கும்,பொலிஸ் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதெனப் பரிசிலனையில் தெரிய வந்துள்ளதெனத் தெரிவித்தார்.

# வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்க மக்களால் முடியாத நிலை வரும்

### –முன்னாள் பிரதி அமைச்சர் பந்துல குணவர்த்தன

நாட்டின் பொருள் விலை உயர்வுடன் வரிகளும் சேர்ந்து மக்களின் வாழ்க்கைச் செலவில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்தியுளளதாக முன்னாள் பிரதி நிதிஅமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ்மக்கள் வாழ்க்கைச் செலவுக்கு ஈடு கொடுக்கமுடியாது பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டிவரும் என அவர் எச்சரித்துள்ளார்.அதனை எவரும் தடுத்து நிறுத்தமுடியாது எனத் தெரிவித்த அவர் அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி எதிர்வரும் புது வருடத்திலேயே மக்கள் உணரக் கூடியதாக இருக்கும் எனவும், அப்போது அவர்களால் அதனைத் தாங்க முடியாது இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (32)

# 10ஆயிரம் பாற்பண்ணைகளை அமைக்கும் திட்டம் இன்று ஆரம்பம்

### ஜே.வி.பி அமைச்சர் அறிவிப்பு

10 ஆயிரம் பாற்பண்ணைகள் அமைக்கும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜே.வி.பி அறிவித்துள்ளது. வெலிமட திக்காபிட்டிய கிராமத்தில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது

வெளிநாடுகளில் இருந்து பாலை இறக்குமதி செய்வதற்காக பெருமளவு பணம் செலவழிக்கப்படுகிறது. இதனைத் தவிர்க்க வேண்டுமானால் இலங்கையிலேயே பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது இலங்கையில் இதற்கான அனைத்து இயற்கை அம்சங்களும் அமைந்துள்ள நிலையிலேயே தமது பாற்பண்ணை அமைக்கும் திட்டம் செயற்படுத்தப்படுவதாக அமைச்சர் அனுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.10 ஆயிரம் குளங்களைப் புனரமைக்க இவர் திட்டமிட்டிருப்பதும் இதற்கான நடவடிக்கையின் போது பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தககது (32)

# சந்திரிகாவின் நடவடிக்கையைப் பொறுத்தே சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தருவோம்

### ஐக்கிய தேசியக் கட்சி அறிவிப்பு

சந்திரிகா அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளுக்கு மேலும் ஆதரவு அளிப்பதென்பது சந்திரிகாவின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் என ஐ.தே.கட்சி வெளி யிட்டுள்ள அறிக்கை யொன்று தெரிவித்துள்ளது.

அதற்கு முன்பாக கூட்டத்தில் உரையாற்றிய கட்சி பேச்சாளர் சமாதான நடவடிக்கைகளுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிக்க கட்சி தீர்மானித்திருக்கும் நிலையில் சந்திரிகா தமது கட்சியைச் சேர்ந்தோரை ஒவ்வொருவராகத் தம்பக்கம் திருப்பினார் என்று குறிப்பிட்டார்.

மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தேசிய நலனைக் கருத்தில் கொண்டு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லத் தேவையானவை போலியற்ற, நிரந்தர, கட்சிசார்பற்ற கொள்கைகளே. இவை கூட்டணியரசுக்குள் காணப்படுவது சந்தேகமே.

சந்திரிகா ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிய போதெல்லாம் ஐ.தே.கட்சி மனத்தூய்மையுடன் பங்களிப்புச் செய்ய முன்வந்தது என்று கூறும் அறிக்கை சமாதான நடவடிக்கையின் போது அரசியல் லாபம் கருதாது தோன்றியுள்ள அனைத்துச் சந்தேகங்களையும் தெளிவாக்கி சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு சனாதிபதியைச் சேர்ந்தது.அந்த வகையில் அவர் செயற்படுவாராயின் ஐ.தே.க. தமது பூரண ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளோம். 2003 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் திகதி விடுக்கப்பட்ட அறிக்கைக்கு ஏற்பவும் 2003 ஜீலையில் தெரிவிக்கப்பட்ட புலிகளின் யோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு ஐ.தே.க பேச்சுக்களை நடத்த இணங்கியது.- அதன்படி டோக்கியோவிலும், ஒஸ்லோவிலும் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி பேச்சுக்களை நடத்துவதாயின் ஆதரவளிக்க ஐ.தே.க தயார் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அவுஸ்.மெல்பேர்னில் மாவீரர் தின நிகழ்வு

## எழுச்சியுடன் மக்கள் பங்கேற்பு

அவுஸ்திரேலிய விக்டோரிய மாநிலத்தில் மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று மெல்பேர்ன் நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலிய பொறுப்பாளர் ஜெயக்குமார் பொதுச்சுடரை ஏற்றினார். அதனையடுத்து தமிழீழ விடுதலை விரும்பியான அருட் தந்தை ரிச்சர்ட் வூட்டன் அவுஸ்திரேலிய தேசியக் கொடியையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் விக்டோரிய மாநிலப் பொறுப்பாளர் யாதவன் தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தனர் தொடர்ந்து ஈகச் சுடரேற்றல், மலர்மாலை அணிவித்தல், மாவீரர் குடும்பங்களின் மலர் வணக்கம், மக்களின் மலர் வணக்கம், அக வணக்கம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன. தமிழீழ தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை அகலத்திரையில் காண்பிக்கப்பட்டது. பரப்புரை பிரிவைச் சேர்ந்த சபேசன் தேசியத் தலைவரின் உரையின் முக்கியத்துவம் குறித்தும் தற்கால அரசியல் நிலை குறித்தும் உரையாற்றியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய War and Peace என்ற நூலையும் ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து இந்நூல் வெளியீடு நடைபெற்றது. தமிழக ஓவியர் புகழேந்தியின் சிறப்புரையும், சிட்னி இளைஞர் களின் நாடகமும், மெல்பேர்ன் இளைஞர்களின் நாடகமும், நாட்டியப் பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந் நிகழ்வில் மண்டபம் நிறையும் அளவிற்கு ஆயிரக் கணக்கில் மக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



கனடா ஒட்டாவாவில் மாணவர்கள் நடத்திய மாவீரர் நாள் நிகழ்வில்

# சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியைக் கைவிட மாட்டாராம்

*–சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்*

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தனது நேர்மையான முயற்சிகளை ஒரு போதும் கைவிடப் போவதில்லையென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மொனராகல மாவட்டத்தில் அபிவிருத்திப் புரட்சி நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பிரதான கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியதுடன், அவ்வாறு ஒன்றுபடாவிட்டால் தனி நாடு கோருவோருக்கு இது பெரும் உந்துசக்தியாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிங்கள பௌத்த மக்கள் உட்பட தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பகிர்வை அமுற்படுத்தவதே இனப்பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வாக அமையும். இதற்கு பேச்சுவார்த்தை தான் பொருத்தமான வழி.

விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால் நிர்வாக யோசனை தொடர்பாக பேச அரசாங்கம் தயார். ஆனால் அது மட்டுல்ல இறுதித் தீர்வு தொடர்பாகவும் பேச வேண்டும். அப்போது தான் நிரந்தரத் தீர்வை எட்ட முடியும்.

சமாதானத்தை அடைவது தொடர்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு மக்களுக்கு மதிப்பளிக்கப்படும். இதற்காகவே கடந்த 10 வருடங்களாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இரு பிரதான தேசிய கட்சிகளும் இணைந்து செயற்பட்டிருந்தால் விடுதலைப்புலிகள் எம்மீது குற்றம் சுமத்த வேண்டிய அவசியம் வந்திராது. இதற்குக் காரணம் ஐ.தே.க இணைந்து செயற்பட முன் வருவதில்லை. அக்கட்சி விடுதலைப்புலிகளுடன் இணைந்து மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலை நாட்ட முற்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

### மின்பிறப்பாக்கி...

பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் இவற்றை பொதுமக்கள் எடுத்துச் செல்ல கூடியதாக இருந்து வந்தது. கிராம சேவகரின் சிபார்சுடன் மாவட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களை ஏற்றுக்கொண்டு மின்சார ஜெனரேட்டர்களை எடுத்துச் செல்ல வடமராட்சி, தென்மராட்சி பகுதி இராணுவத்தினர் அனுமதித்து வந்தனர். புதிய கட்டுப்பாட்டின்படி, கடும் பாதுகாப்புக் கெடுபிடிகள் நிறைந்த பலாலிக்குச் சென்று அனுமதிப்பத்திரம் கேட்பது நடக்கக் கூடிய விடயமா என்று பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில் தற்போது வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் இராணுவத்தினர் தமது காவலரண்களை பலப்படுத்துவதையும், புதிய சோதனைச் சாவடிகள் அமைப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது.

### சாட்சிகளை...

அவர்கள் குறித்த சில தகவல்களையும் நீதிமன்றத்தில் தெரிவிக்க முன்வந்துள்ளனர். இதன் மூலம் மேற்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் யார் என்ற உண்மைகள் பல வெளிவரக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி சம்பவத்தை நேரில் கண்ட இரு சாட்சியாளர்களையும் தனிப்பட்ட முறையில் சிறிலங்காப் பொலிசார் சந்தித்து சிறிலங்கா அரச படைகளுக்கோ அல்லது அரசபடைகளின் உதவிகளுடன் குடாநாட்டில் செயற்பட்டு வரும் ஆயுதக் குழுக்களுக்கோ எதிராக நீதிமன்றத்தில் சாட்சியம் தெரிவிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தி மிரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (33)

### வாகனம்...

பகுதியில் குறிப்பிட்ட ஓர் இடத்தில் சேறும் சகதியுமாகக் காணப்படுவதனால் பேருந்துகள் செல்ல முடியாது சிரமத்திற்குள்ளாகின்றன. அத்துடன் பூநகரி மன்னார் வீதியில் செம்மன்குன்று என்னும் இடத்தில் குளத்திற்கு அருகாமையில் அதிக பள்ளமாக இருப்பதனால் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்வீதி சீர் கேட்டால் நேற்று கன்ரர் வாகனம ஒன்று தம்பிராய் சந்திக்கும் பூநகரி வாடியடிக்குமிடையே வீதி யோரமாக சரிந்து குடைசாய்து கிடக்கக் காணப்பட்டது. (34)

### கண்காணிப்புக்...

தலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் த.குயிலின்பன் தெரிவித்தார்

அவர் மேலும் கருத்துரைக்கையில், திருக்கோவிலில் அமைந்துள்ள விசேட அதிரடிப் படை முகாமுக்குள் இருக்கும் வைத்தியசாலையை மீண்டும் மக்கள் பாவனைக்கு விட்டுத்தர வேண்டும் எனதாம் பலமுறை கேட்டுக்கொண்டதற்கு அமைய நேற்று கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டின் முடிவிற்கு அமைய போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு இந்த மாதத்திற்குள் குறிப்பிட்ட முகாமை மூடி வைத்தியசாலையைத் திறப்பதற்கான தீர்மானத்தை வெளியிட்டது

எனினும் இது எந்தளவுக்கு வாய்ப்பு என்பதை தம்மால் கூற முடியாதுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை இது தொடர்பாக விசேட அதிரடிப்படையின் கொமாண்டர் பிரதி பொலிஸ்மா அதிபர் லெவ்ஹே கருத்துரைக்கையில், அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த திருக்கோவில் முகாம் அவசியமானது. இந்த நிலையில் அங்குள்ள வைத்தியசாலையும் மக்களின் பாவனைக்காக திறக்கப்படவேண்டும் அதனடிப்படையில் முகாம் மூடப்பட்டு வேறொரு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்பதை தாம் ஏற்றுக்கொள்கின்ற போதும் அதற்கான நிதி இன்னும் கிடைக்கவில்லை எனக் கூறினார். அந்த நிதிகிடைத்ததும் முகாமைத் தாம் வேறொரு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக லெவ்ஹே தெரிவித்தார்.

### சனாதிபதி...

தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக தெரிவித்துள்ளார். (32)

### இந்திய...

ஆகியவற்றிடமிருந்தும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளலாம். இதேவேளை தென்னிந்தியத் திரைப்படத் துறையினரிடமும் இதுகுறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கோரவேண்டும். தென்னிந்தியத் திரைப்படங்களுக்கு வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமிழர்களால் பலகோடி ரூபா பணம் பெரும் லாபமாக் கிடைக்கிறது என்றால் மிகையில்லை. அதாவது அவர்களது ஊதியத்துக்கு ஈழத் தமிழர்களது பங்கு மிகப்பெரியது. ஆகவே ஈழத் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனஅழிப்பு நடவடிக்கைக்கான உதவியை இந்திய அரசு மேற்கொள்ள அவர்கள் ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது. பாகிஸ்தான் படையினரால் கொல்லப்பட்ட தமது நாட்டுப் படையினருக்கு உதவி செய்ய ச லை நிகழ்ச்சி நடத்தி நிதி சேகரித்துக் கொடுத்த தென்னிந்தியத் திரையுலகம் தமது அரசின் நடவடிக்கையால் தொப்புள் கொடி உறவான ஈழத் தமிழர்கள் பாதிக்கப்படும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தமது நியாயமான கரிசன்னையைக் காண்பிக்க வேண்டும். நேரடியாக அல்லது தமிழ்நாடு அரசின் ஊடாக மத்திய அரசுக்கு அழுத்தம கொடுக்கவேண்டும். மக்கள் சக்தியால் மட்டுமே இந்த முற்தடுப்பு நடவடிக்கையை . செம்மையாக செய்து முடிக்கலாம்.

### வீரவணக்கம்...

கட்டை உன்னிச்சை மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### இந்தியாவின்...

வின் நலன்களைப் பாதிக்கக் கூடிய விதத்தில் தாம் பயன்படுத்தப்படுவதையும் தமிழ் மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் எனத் தெரிவித்ததோடு, எந்தவொரு வெளிநாட்டு சக்திகளின் நலன்களையும் பாதிக்கக் கூடிய விதத்தில் நடந்துகொள்ளும் எண்ணம் தமிழர் தேசத்திடம் கிடையாது. அதேவேளை எந்த ஒரு வெளிச் சக்தியுடனும் எம்மை இணைத்துக் கொள்ளும் ஆவலும் எமக்குக் கிடையாது. பலமானதும், ஸ்த்திரமானதுமான தமிழர் தேசம் இருப்பதையும், அதனை அங்கீகரிப்பதையும் உறுதிசெய்து கொள்வதுதான் - இந்தப் பிராந்தியத்தில் கேந்திர சமநிலையைப் பேண விரும்பும் அனைவருக்கும் நல்லது, என்று அவர் மேலும் கூறியுள்ளார். சிறிலங்காவில் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கமும் தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றுவதையும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் நோக்குடன் வெளிநாட்டுக் கொள்கைகளை வரைவதையும் அவர் விபரித்தார்.

### தந்திரோபாய...

கிழக்கில் உடனடி போர் நிலமையை எதிர்கொள்ளும் விதத்தில் முப்படையினருக்கும் உடனடியாகத் தேவையான போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வது குறித்து இந்த விசேட குழு சிபார்சு செய்யும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுவின் தலைவராக கடற்படையின், நடவடிக்கைகளுக்கான இயக்குநர் நாயகம் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, கூட்டு நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தலைமையகத்தின் நடவடிக்கைகளுக்கான இயக்குநர் பிரிகேடியர் பராக்கிரம பன்னிப்பிட்டிய, இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கான இயக்குநர் பிரிகேடியர் கிருஷாந்த சில்வா, விமானப் படையின் நடவடிக்கைகளுக்கான இயக்குநர் எயார் கொமடோர் ரொஷான் குணதிலக, பிரிகேடியர் ஏ.சந்திரசிறி மற்றும் திஸரா சமரசிங்க ஆகியோர் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு ஏற்கனவே, வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று நேரடியாகத் தகவல்களைத் திரட்டியுள்ளது. முழுத் தகவல்களும் திரட்டப்பட்ட பின்னர் இறுதி அறிக்கை பிரதம பாதுகாப்பு அதிகாரியான அட்மிரல் தயா சந்தகிரியிடம் கையளிக்கப்படும்.தயா சந்தகிரி, தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார். வடக்கு - கிழக்கில் திடீர் தாக்குதலொன்று நடைபெறும் பட்சத்தில் அதனை முப்படையினரும் உடனடியாக எதிர்கொண்டு வெற்றிகரமாக முறியடிக்கும் விதத்தில் முப்படையினருக்கும் தேவையான ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் கவனத்தில் கொண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் இந்தக் குழு நடவடிக்கை எடுக்கும். அதே நேரம், மீண்டும் யுத்தம் வெடித்தால் முழு நாட்டினதும் பாதுகாப்பை கையாள்வது குறித்தும் இந்தக் குழு சிபார்சுகளை வழங்கும்.மீண்டும் போர் வெடித்தால் அதனை எதிர்கொள்ளத் தேவையான திட்டங்கள் எதுவுமே இல்லாத நிலையிலேயே பாதுகாப்புத் தரப்பு தற்போது இந்தத் திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்ட நிலையில், முதல் தடவையாக அரசு இவ்வாறானதொரு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### திருமலையில்...

தலைவர் தனது வெளிநாட்டுப் பயணத்தை நிறைவுசெய்து சிறிலங்காவுக்குத் திரும்பியதும், இச்சந்திப்பு இடம்பெறும் என கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சந்திப்பொன்றை மீண்டும் ஏற்படுத்தித் தருமாறு இராணுவ வட்டாரங்கள் கேட்டிருப்பதாகவும் இச்சந்திப்பு கண்காணிப்புக்குழுத் தலைவரின் சந்திப்பின் பின்னர் இடம்பெறும் எனவும் தெரிய வருகிறது. (லோ)

இன ரீதியான வயது, பால், சமய சமூக ரீதியான பாகுபாடின்றி எல்லோரது
கௌரவத்தையும் சமத்துவத்தையும் வடக்கு-கிழக்கு
மனித உரிமை செயலகம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.
(சி-11002)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.